1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு ஆவணி மாதம் 25-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 33-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### குருமார் ஞானவொடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. குருப்பிரசாதிகளின் முதலாவது பிரிவான ஞானவொடுக்கம் நேற்றுக்காலை முடிவாயிற்று. இரண்டாவதுபிரிவான ஞானவொடுக்கம் இன்று சாயந்தரம் ஆரம்பமாகும்.

### கல்லூரி அதிபரின் ஆலோசனை

அகில–இலங்கை ஆசிரியர்சங்கக் கூட்டத்திலே சென்றவெள்ளிக்கிழமை கொழும்பு, சென்யோசெவ் கல்லூரி அதிபர் அதிவண. ஜே. பீற்றர்பிள்ளை சுவாமியவர்கள் பேசியபோது: ஆசிரியர்கள் உயர்ந்த சமபளவிகிதம் பெற விரும்பினால் அவர்கள் அதனைச்சம்பாதிக்க வேண்டுமெனக்கூறி, ஒரே அளவான ஆசிரியர்கள் ஒரேயளவான பாடசாலைக் கட்டடங்களைக்கொண்டு இருமடங்கான பிள்ளைகளுக்குப் படிப்பிக்கக்கூடிய ஓர்திட்டத்தை விளக்கிக் காட்டினார். அதாவது, பிள்ளைகளுக்கு அரைநேரம் பாடசாலையில் படிப்பிக்க வேண்டும்; மீதிஅரைநேரமும் பாடசாலைக்குவெளியே கமத்தொழில், ஆடுவளர்த்தல், தச்சுவேலைசெய்தல், செங்கல்செய்தல் ஆதியவற்றிலே அவர்களைப் பயிற்றல்வேண்டும்; இந்த மற்றஅரைநேரத்தில் மற்றோர் தொகையான பிள்ளைகளைப் பாடசாலையில் படிப்பிக்கலாம்; பாடசாலைகளுக்குவெளியே நடைபெறும் வேலைகளிலிருந்து கிடைக்கும்வருமானத்தைக் கல்விச் செலவில் ஒருபகுதியை ஈடுசெய்வதற்குப் பயன்படுத்தலாமெனச் சுவாமியவர்கள் கூறலாயினர்.

### பிரதிநிதியின் வாக்குறுதி

மட்டக்களப்புப்பகுதி ஆசிரியர்களின் விடுமுறைக்கழகத்திலே பெருந்தொகையாகச் சமுகமளித்திருந்த ஆசிரியர்களின்கூட்டத்திலே மட்டக்களப்புப்பிரதிநிதியான திரு. ஆர். பி. கதிர்காமர் அவர்கள் பேசியபோது: அடுத்த பங்குனிமாதத்திற்குள் சுயபாஷா ஆசிரியர்களின் சமபளவிஷயத்திலும், மற்றும்விஷயங்களிலும் நீதி வழங்கப்படும்; இவ்விஷயங்களைப் பற்றி நாடெங்குஞ்சுற்றிக் கூச்சலிட்டுக்கொண்டுதிரியும் மனக்கசப்புள்ள அரசியல்வாதிகளின் பேச்சுகளைக் கேட்டு ஏமாறுதிருக்கும்படி நான்உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேனெனக் கூறலாயினர். மேலும்அவர்கூறியதாவது: ஒருபொழுதும் தமிழ்மொழி புறக்கணிக்கப்படமாட்டாதென நான் உங்களுக்கு உறுதிகூறுகின்றேன். தற்பொழுது திரு.சுந்தரலிங்கம்அவர்கள் தமிழ்மொழிக்கு அளிக்கப்படவேண்டிய அந்தஸ்தைப்பற்றி ஒரு சிலுவையுத்தத்தை விரைவில் ஆரம்பிக்கப்போகிறார். அவருடைய சகோதரர்களில்ஒருவர் தக்கமுறையில்நடத்தப்படவில்லையென்ற காரணமாக அவர் மனத்தேயுண்டான சுயநலத்தோடு தொடர்புபட்ட வெறுப்பே இதற்குக்காரணமாய் இருக்கவுங்கூடும். தற்போதுநடைபெறும் பல முரண்பட்டசெயல்களெல்லாம் இவர்கள் அனைவரும் பொதுசனநீதிக்காகப் போராட முன்வந்துள்ளனர் என்பதைத் தெரிவிக்கின்றனவெனினும், பற்பலசந்தர்ப்பங்களில் இத்தகைய போராட்டங்களின் அடித்தளத்தில் சுயநலத்தோடு தொடர்புபட்டஆத்திரம் மறைந்திருந்து தூண்டிவிடுவதை நீங்கள்காணக்கூடும். பாராளுமன்ற கூட்டமொன்றிலே திரு. ஆர். ஈ. ஜயதிலகஅவர்கள் சிங்களமொழியை மட்டுமே தேசியபாஷையாக்க வேண்டுமென வேண்டிக்கொண்டபொழுது, அதனைச்சிறிதும் பொருட்படுத்தாது திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனஅவர்கள் "இது நாங்கள்உறுதிகூறிய இலட்சியத்திற்கு முற்றும் எதிரானது" எனக் கூறினார். ஐக்கிய தேசீயக்கட்சி எவ்வளவு நேர்மையாக நடந்துகொள்ளுகிறது என்பதைவிளக்க இதுஒன்றே போதும்.

### வெல்லத் தொழிற்சாலை

தலைமன்னாரிலே வெல்லம், பனம்பொருள் ஆகியன செய்வதற்கென்று ஓர்தொழிற்சாலையை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கெனப் பனைமரங்கள்நிறைந்த ஐம்பதுஏக்கர்காணி அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிலமாதங்களுக்குமுன் இந்தியாவிலிருந்துவந்த பனம்பொருள் உற்பத்தி நிபுணரான திரு. ஏ. டி. காசிஅவர்கள் மன்னார்ப்பகுதியிலே பனம்பொருள்உற்பத்தி சம்பந்தமாக அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த ஓர்அறிக்கையின் விளைவாகவே இந்தத்தொழிற்சாலை அமைக்கப்படுகிறது. அவரே இத்தொழிற்சாலையை அமைக்கும்வேலை மேற்பார்வையிடுகின்றார். இருநூறுபேருக்கு வேலை கிடைக்கக்கூடிய இத்தொழிற்சாலையிலே நாள்ஒன்றுக்கு ஒன்றரைத்தொன் வெல்லம் செய்யப்படுமெனத் தெரியவருகிறது.

### தேசீயவருமானமும் செலவும்

சென்ற சனிக்கிழமையன்று பாதுகையைச்சேர்ந்த தயபோர் கிராமஅபிவிர்த்திச் சங்கத்தின் வருடாந்த கூட்டத்துக்கு நிதிமந்திரியார் திரு. எம். டி. எச். ஜயவர்த்தனஅவர்கள் தலைமைவகித்துப் பேசியபோது சிலவிசேஷங்களைத் தெரிவித்திருக்கின்றார். அவைவருமாறு: இலங்கையின் தேசீயவருமானம் 400 கோடி ரூபா மாத்திரமே. அமெரிக்காவிலே ஒருவரின் வருடாந்த சராசரிவருமானம் 9,000ரூபா ஐரோப்பாவில் 3,900ரூபா. இலங்கையில் 540ரூபா. இலங்கையர்ஒருவரின் சராசரிவருமானம்தற்போதையமட்டத்தில் எப்போதுமே இருந்துவருமாயின் இது முற்றும்திருப்திகரமாகும். இலங்கைக் குடிசனத்தொகையின் வருடாந்த பெருக்கம் இரண்டரைலட்சம் போகும். இந்தப்பெருக்கத்தால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரேயொரு உபாயம் கிராமஅபிவிர்த்தி இயக்கமேயாகும். அரசாங்கத்தின் வருமானத்தின் ஒவ்வொரு 10ரூபாவிலும் 6ரூபா அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குச் செலவிடப்படுகிறது. எஞ்சிய 4 ரூபாவுமே 80 லட்சம்சனங்களுக்கும் செலவிடப்படுகிறது. அதனால் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் உயர்ந்தசம்பளங்கேட்பது அநீதியாகும். அடுத்தஐந்து வருடங்களிலும் மேலும் 1,20,000 ஏக்கர் காணி வயல்நிலங்களாக மாற்றப்படும். வரவுசெலவுத்திட்டத்திலே வரிச்சுமைகளிலிருந்து வறியவர்களைத் தவிர்த்துவிட்டிருக்கிறேன். வரிகள், துறைமுகத்தீர்வைகள், கார்வரிகள் ஆதியனமூலம் முதலாளிகளிடம் அதிக வருமானம் அறவிடப்படும். இவ்வாறே வருடந்தோறும் செய்துகொண்டு வருவேன்.

### புத்தளமும் நல்லதண்ணீரும்

பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் வருகிறஐப்பசிமாதம் 3-ந் திகதியன்று புத்தளப்பகுதிக்கு உத்தியோகபூர்வமாய் முதன்முறையாக விஜயஞ்செய்யவிருக்கின்றார். அப்போது புத்தளப்பட்டினத்துக்கு நல்ல தண்ணீர்உதவும் திட்டம்ஒன்றை ஆரம்பித்துவைப்பார். இத்திட்டத்தின்கீழ் புத்தளப்பட்டினத்திலிருந்து ஐந்துமைல் தூரத்திலுள்ள மீயோயா ஆற்றங்கரையிலே கிணறுகள் வெட்டப்பட்டு அவற்றிலிருந்து பட்டினத்துக்குத் தண்ணீர் உதவப்படும்.

### ஆறுபேருஞ்சேர்ந்து அப்பீல்

இரத்தினபுரிக் கொலைவழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஐயாத்துரைத்தேவர், அவர்மனைவிதங்கம்மா, அவரின் இருசகோதரர்களான சொக்கையா, ஆண்டி என்போர், அங்கண்ணன், அவர்மனைவி மாயாக்காளனும் ஆறுபேரும் இம்மாதம் 24-ம், 25-ம், 26-ம், 27-ம், 30-ம், 31-ந் திகதிகளில் கழுவேற்றப்படவேண்டியவர்கள். இவர்களிலே முதலாம்எதிரியான ஐயாத்துரைத்தேவரின் இரண்டாவது மனைவியான அந்தோனியம்மாவைக் கொலைசெய்ததிலே குற்றவாளிகளாகக்கண்டு இவர்கள் ஆறுபேரும் சென்றமாதம் 22-ந் திகதியன்று மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் ஆறுபேருஞ்சேர்ந்து தங்களுக்கு விதிக்கப்பட்ட தீர்ப்புச் சரியற்றதென ஆட்சேபித்துச் சென்றதிங்கட்கிழமை அப்பீல்கோட்டுக்கு மனுப்பண்ணியிருக்கின்றனர்.

### விசேஷமலிவு திக்கெற்றுகள்

றெயில்வேப் பிரயாணிகளின் வசதியைமுன்னிட்டுப் பலவிதமானமலிவுதிக்கெற்றுகளை அரசாங்க றெயில்வேப் பகுதியினர் சமீபகாலமுதல வழங்கி வருகின்றனர். ஓர்ஸ்ரேஷனிலிருந்து 25 மைல்தூரத்திலும, அதற்கப்பாலுமுள்ள இடங்களுக்குச்சென்று அன்றிரவு 12 மணிக்குமுன் புறப்படும் எந்தறெயினிலாவது திரும்பிவருகிறவர்கள் போவதற்குரிய ஒற்றைச்சலாரிலும், அதிற்பாதியிலும் போய்வரலாம். இதேமாதிரியாக 75 மைல் தூரத்திலும், அதற்கப்பாலும் ஒற்றைச்சலாரில்சென்று இருதினங்களில் திரும்புவதற்கான மலிவுதிக்கெற்றுகளும் கொடுபடுகின்றன இன்னும் வாராந்தநாட்களிலே 50 மைல்தூரத்திலும், அதற்கப்பாலுமுள்ள இடங்களுக்கு வியாழக்கிழமை நடுச்சாமத்துக்கும், சனிக்கிழமை நடுச்சாமத்துக்குமிடையே பிரயாணஞ்செய்து சனிக்கிழமை நடுச்சாமத்துக்கும், திங்கட்கிழமை நடுச்சாமத்துக்குமிடையே திரும்புகிறவர்களுக்கும் அதேவிதமானமலிவுதிக்கெற்றுகள் வழங்கப்படுகின்றன. இவர்கள் மெயில்றெயின்கள், யாழ்ப்பாணஎக்ஸ்பிறெஸ் றெயின்களிலும் பிரயாணஞ்செய்யலாம். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திரிகோணமலைமுதலிய தூரமான இடங்களுக்கிடையே வாரத்தின் கடைசிநாட்களில் சென்றுதிரும்புகிறவர்களுக்கு இந்தமலிவுதிக்கெற்றுகள் பெரிதும் வசதியளிப்பனவாகும். பத்து அல்லது பத்துப்பேருக்குமேல் கோஷ்டிகளாகப் பிரயாணஞ்செய்கிறவர்கள் ஒன்றேகால்வீதச் சலாரில் மலிவுதிக்கெற்றுகள் பெற்றுக்கொள்ளலாம்.

### மாணவரும் விமானப்பயிற்சியும்

வருகிறஐப்பசிமாதம் 1-ந் திகதியன்று பாடசாலைகளின் விமானப்பயிற்சிப்படையொன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இந்தப்படையில்சேர்ந்து பயிற்சிபெறவிரும்பும் மாணவர்களை அனுப்புவதற்கென ஆனந்தாக்கல்லூரி, றோயல் கல்லூரி, சென் தோமஸ்கல்லூரி,சென் பீற்றேர்ஸ்கல்லூரிஆகியநான்கும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றிலே ஒவ்வொன்றிலிருந்தும் 25மாணவர்களுக்கே பயிற்சியளிக்கும்வசதி கிடைக்கும். ஆனால், ஒவ்வொன்றிலும் அவ்வளவுதொகையான மாணவர்கள் பயிற்சிபெற முன்வந்திருப்பதால் மாணவர்களைஎவ்வாறுதெரிவுசெய்வதென அறியாது கல்லூரிஅதிகாரிகள் திகைக்கிறார்களெனச் சொல்லப்படுகிறது.

### புதிய தேசீயதலைவர்

மிஷன்களுக்கு உதவிசெய்யும் பாப்பரசது சபைகளின் தேசீயதலைவராக இதுவரை இருந்துவந்த மிகவண. ஜி. போர்தின் சுவாமியவர்களிடமாகப் புதியதலைவராய் வண. மனிக் முத்துக்குமாருசுவாமியார் விசுவாசப் பரப்புதற் திருச்சங்கத்தாலே நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார்.

### விளையாட்டுப்போட்டி

அகில-இலங்கை ஆசிரியகலாசாலைகளின் விளையாட்டுப்போட்டி சென்ற 12-ம், 13-ம் திகதிகளிலே மகாக்கம ஆங்கில ஆசிரியகலாசாலை விளையாட்டு மைதானத்தில் நடந்தேறியது. இதிலே இலங்கையிலுள்ள ஆசிரியகலாசாலைகள் அனைத்தும்பங்குபற்றின. இப்போட்டியிலே மகாக்கம ஆசிரியகலாசாலை முதல்இடமும், கொழும்புத்துறை ஆசிரியகலாசாலை இரண்டாம்இடமும், போளவளானை ஆசிரியகலாசாலை மூன்றும்இடமும் வகிக்கலாயின. வெற்றி பெற்றவர்களுக்குப் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் பரிசில்கள் வழங்கினார் கொழும்புத்துறை ஆசிரியகலாசாலையிலிருந்து இரு மாணவர்களே போட்டியிற் கலந்துகொண்டபோதிலும் இரண்டாவது இடத்தைஈட்டியமை பாராட்டத்தக்கதாகும்.

— நிருபர்

### காலநிலை

மப்புமந்தாரம் அதிகமாகக் காணப்படினும் சிறுதூறல் அல்லாது மழை இல்லை. சென்றவார இறுதியிலே யாழ்ப்பாணக்குடாநாட்டின் சிலபகுதிகளில் நல்லமழைபெய்திருப்பதால் ஆவணி விதைப்பு ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. ஊரிலே தடிமன், இருமலுடன்கூடிய குளிர்சுரம் இன்னுமே தலைகாட்டிக்கொண்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயம் இதுதானா?

— ஆசிரியர், வி. பி. மரியாம்பிள்ளை —

இத்தாலியிலே சுமார் 700 வருடங்களுக்குமுன் போனான ஓர்பிரசங்கியார் இருந்தார். அவர் தமதுசபை ஒழுங்குப்படி, ஞானவொடுக்கங்கள் போதிப்பதற்கும், ஞானவிசாரணைகள் நடத்துவதற்குமாக நாட்டின் பலவிடங்களுக்கும் போய்க்கொண்டுவந்தார். போகும வழியிலே அவர் கிராமங்கள்தோறும் பலவாரங்கள் தங்கிச்செல்வது வழக்கம். ஓர்முறை அவர் ஒருசிற்றூரில் சிலகாலம் தங்கநேர்ந்தது. அவர் பெருஞ்சாதுரியர், அதிகஞ் சமர்த்தர் என்று அங்குள்ளார் ஏலவேஅறிந்திருந்தனர். அவர்செய்த அற்புதச் செயல்களும் அன்னார்செவிக்கு எட்டியிருந்தன. அவர் ஓர்பிரபல பிரசங்கியார் என்பதும் பிரசித்தமாயிற்று. ஆகவே, அவ்வூரவர் மிகுந்தகுதூகலத்துடன் அவரை வரவேற்றனர்.

அவர்களுக்கெல்லாம் தலைவர் பெருந்தனவந்தரான ஓர்பிரபுவே. இவர் எப்போது, எங்கே அவரைக் கண்டுகளிக்கலாமென்று நெடுநாள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். கடைசியாக அவர்ஆசித்து எதிர்பார்த்திருந்த நாள் அணமியது. அன்றுசாயந்தரம் சகலருமே பிரமிக்கும்படியாக மாரிமழை போன்று அவர்செய்த பிரசங்கமானது கன்னெஞ்சுகளையும் நெகிழச்செய்ய வல்ல மாத்திரையேபோல் அத்துணை நேர்த்தியாய் இருந்தது. அதைக்கேட்டதே சிறுவர் சிறுமிகளெல்லாம் குதூகலடங்கியவர்களாய் அவரது அருள் நிறைந்த வதனத்தையே ஏறெடுத்து நோக்கிநின்றார்கள். வாலிபரோ, வயோதிகரோ எல்லாரும் அங்கிங்கு அசையாது, அவர்பிரசங்கத்தில் லயித்தவர்களாய் இன்பவெள்ளத்தில் மூழ்கியிருந்தார்கள்.

கடைசியாகப் பிரசங்கம் முடிந்தது. அனைவரும் தத்தம்இல்லங்களுக்குச் சென்றார்கள். ஆனால், அந்தத் தனவந்தான பிரபுவோ தலைவிறைத்தவர் போல் நிலைபெயராது அவர்வரவை எதிர்நோக்கி வெளியிலே காத்துநின்றார். அப்பிரசங்கியாரை எதுவிதமும் தமதுஇல்லத்துக்கு அழைத்துச்செல்ல வேண்டுமெனத் தீர்மானித்தார். ஈற்றில் அவர் வெளிகொண்டு வந்ததும், "சுவாமி! தாங்கள் இவ்வூரிலே தங்கியிருக்கும்நாட்களில் எனது இல்லத்திலும் ஓர்நாளாவது தங்கவேண்டும்" எனப் பரிவாகவேண்டினர்.

பிரசங்கியாரும் மனமுவந்து அவர் கேள்விக்குச் சம்மதித்து அன்றிரவை அவர்மனையில்கழித்தார். அங்கே அழகான ஓர்சிறியஅறை இருந்தது. ஓர் தனியாளுக்கு அது போதியதாய்இருந்தது. அஃது கீழ்மாடியிலுள்ள ஓர் அறை. படுக்கையாதின பக்குவம்செய்யப்பட்ட ஓர்பளிங்கறை. சத்தஞ்சந்தடியற்ற ஓர்தனிஅறை. சுருங்கச் சொல்லின், அதுசுவாமியாருக்குஎல்லா வகையிலும் பொருத்தமான ஓர்அறையெனலாம். அதனைப்பிரபு அவருக்குச் சித்தம்செய்து, அன்னபானமெல்லாம் போதியளவாய் அளித்துப் போராணந்தங்கொண்டார். அம்மட்டா! தங்களுக்கு ஏதும்தேவையோ என்றும் இடையிடையேசென்று விசாரித்துக் கொண்டேவந்தார். அவரின் அலட்டுகளுக்குத் தப்பிக்கொள்ளுமாறு சுவாமியார் செபப்புத்தகத்தைக் கையிலெடுத்துத் தேவதோத்திர கீதங்களைப் பாடத்தொடங்கினர்.

கடைசியாக, "இனி நான் எனது கடமைச்செபத்தைச சொல்லப்போகிறேன்" என்று பிரபுவிடம் கூறிவிட்டு முழந்தாட்படியிட்டார். புத்தகத்தை விரித்துக் கலகலெனப் பக்கங்களைப் புரட்டிச் செபத்தில் ஆழ்ந்தார். இதைக்கண்டதேபிரபு தமதுஅறையை நாடி மேன்மாடிக்குச் சென்றார். சிறிதுநேரத்துளெல்லாம் நித்திரை செய்யப் போயினர். ஆனால், அவருக்குத் தூக்கமே வந்தபாடில்லை. உணவின்றிப்பசியுடன் உறங்கப்போனவனைப் போல்கொட்டாவிவிட்டு, அங்குமிங்குமாகப் படுக்கையில் புரண்டுகொண்டே பலவாறு தன்னுள் சிந்திக்கலானார்.

"இந்தக் குருபிரசங்கியார் புதுமைகள் செய்கிறவராமே; இவர்செய்த புதுமைகள் அநேகமென்று பேசிக் கொள்ளுகிறார்களே; பெரும்புண்ணியவாளரென இவரைப்புகழ்ந்து போற்றுகிறார்களே; கோடியற்புதரெனக் கொண்டாடுகிறார்களே; காணாத பொருட்களைக் காட்டித்தர வல்லவரென்றும், கவலையுற்றாரின் துயரைப் போக்கும் காருண்ணியரென்றும், ஏககாலத்திலே ஈரிடங்களில்நிற்க ஈசனருள் பெற்றவரென்றும் பாராட்டுகின்றார்களே; அதனால், இன்றுஇவர் எனதுஇல்லத்துக்கு எழுந்தருளிவர நான் என்ன தவஞ்செய்தேனோ? இவரைப்பற்றிச் சொல்லப்படும் அதிசயங்கள்யாவும் இவரில் அமைந்துள்ளனதானா? என்பதை இன்றுநான் அறியவேண்டும்; இவரைப் பார்க்கும்போது வித்தியாசம் எதையும் காணேமே; என்னைப்போலும் ஓர் முழுமனிதர்தானே இவரும்; ஏனையவர்களைப் போன்ற மானிடப் பிறவியாகத்தானே காணப்படுகின்றார் இவரும்; அவ்வாறாக அற்புதமாம், அருளாம், அலைகளும் அளவிறந்தனவாம்; மந்திரமுமல்ல, மாயமுமல்லவென்று சாதிக்கிறார்களே; இவற்றின் மெய்பொய்யை நான்பரிசோதித்து அறியத்தான் வேண்டும்; அதுவும் இன்றேஅறியவேண்டும். இதுபோலும் ஒருநல்லதருணம் இனிமேல் கிடைக்குமோ அறியேன்" என்றெல்லாம் பிரபுஎண்ணித் தம்முள் ஏதோ முடிவுக்குவந்தவராய்ச் சட்டெனப் படுக்கையைவிட் டெழுந்தார். அறைக் கதவை மெதுவாகத்திறந்தார். படிகள் வழியாய் அரவப்படாமலே படிபடியாய்க் கீழேஇறங்கினர்.

சுவாமியார் தங்கிய அறைக்கு ஓர் சன்னல். அது மேல்மாடிப்படிகளை நோக்கியவண்ணம் அமைக்கப்பட்டிருந்தது. அதன்வழியாய் அந்தமாடிமேல் நடப்பதையெல்லாம் தெரிந்துகொள்ளலாம். தனவந்தர் மெதுவாகத் தவழ்ந்துசென்று சன்னலை அடைந்தார். அதன்திரைமறைப்பைத் தடவிப்பார்த்தார். சற்றும் அரவமின்றியே சாடையாக அதைஉயர்த்தி உள்ளேநோக்கினர். கண்கள் கண்டன. முன்போலவே இருகாங்களிலும் தமதுமுகத்தைதவைத்து அவர் செபத்தில் ஆழ்ந்திருக்கக் கண்டார். ஏதும் அதிசயத்தைக் கண்டுகொள்ள ஆசித்துச்சென்றவர் ஒன்றையுமே காணாது அங்கலாய்த்துநின்றார். இவரிற்காணும்அதிசயம் இதுதானாவென்று எண்ணியவராய் நீட்டிய தலையை மெதுவாக வெளியேஇழுத்தார். ஓர்நெடுமூச்சுவிட்டுத் தூக்கந் தெளிந்தவர்போல கண்களைப்பிசைந்தபடியே சன்னற்பக்கம் தமதுமுதுகைத் திருப்பிச் சிறிதுசாய்ந்தார்.

"நான் குருமார்பலரைப் பார்த்திருக்கிறேன்; அவர்களும் இதேமாதிரியாய் மனதைஅடக்கிக் கடவுளைவழிபட்டு இரவிலும்முதலாய் நெடுநேரஞ் செபித்துவருவதை அவதானித்திருக்கின்றேன்; அவ்வாறாயின் இவரைப்பற்றி அயலவர்பரப்பிய அற்புதஅதிசயமெல்லாம் ஆகாயப்புழுகாக்கும்; வெறுங் கட்டுக்கதைகளாக்கும்; ஆராய்ந்துபாராது எழுப்பிய வீண்வதந்திகளாக்கும்; நான்அவற்றையெல்லாம் நம்பியது பெரும்மதியீனம்; இனிமேல் தாமதிக்கலாகாது" என்று சிந்தித்துக்கொண்டு நிமிர்ந்தார். தமது மாடியைநோக்கிச் சிலஅடிகள்எடுத்து வைத்தார். படுக்கையைநாடிப் பரபரத்துச்சென்றவர், "இல்லை இல்லை, இன்னுமோர்தரம் பார்ப்போம்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு சென்ற வழியே திரும்பினர். (தொடரும்)

# வாழ்விலும் சாவிலும் . . .

( ஆசிரியர், எல். பாக்கியநாதர் )

இற்றைக்குப் பதினறுநூற்றாண்டுகளுக்குமுன் றோமைநகரில் ஓர்பிரபு வசித்தார். அவர் தமதுகம்பீரமான மாளிகையிலே இன்பசுகபோகங்களை விரும்பும் தமதுபாரியாருடன் இன்புற்றிருந்தார். அவருடையபெயர் கிலாஸ். அவர்களுக்கு ஓர்மகவு பிறந்தது. அதற்குஅவர்கள் விற்றஸ்என்று பெயரிட்டனர். மகவுபிறந்ததும் அவர்கள் வாழ்க்கை அவர்களுக்குச் சந்துஷ்டியுள்ளதாய் இருந்திருக்கவேண்டும். அவர்கள் கத்தோலிக்கராய் இருந்திருந்தால் — அந்தக்குழந்தைமட்டில் தேவ திருவுளம் இன்னதென்று அவர்கள் கொஞ்சமேனும் விளங்கியிருந்தால் அவர்கள்வாழ்வு அவர்களுக்கு இன்பமாகவே இருந்திருக்கும். ஆனால், அதற்குமாறாக அவர்கள் துன்பமடைந்தனர். தங்கள் அழகானகுழந்தையை அவர்கள்வெறுத்தனர். அதன்கரைச்சலை அடியோடுவெறுத்தனர். அதனால் ஓர்அடிமையின் பொறுப்பில் குழந்தையை ஒப்படைத்துவிடத் தீர்மானித்தனர்.

## அடிமை கிறெசென்சியா

றோமைநகரில்வெப்பமான ஒருநாள். ஓர்அழகானசீமாட்டி அலங்கரிக்கப்பட்ட ஓர்தேரிலே அடிமைகளின் சந்தையைநோக்கிச் சென்றுகொண்டிருந்தாள். அவள்தான் விற்றசின் தாய். விற்றசைவளர்க்க ஓர்தாயை விலைக்கு வாங்குவதற்காக அவள் அடிமைச்சந்தைக்குச் சென்றாள். அநேகதேசங்களிலிருந்து வியாபாரத்திற்காகக் கொண்டுவரப்பட்ட அடிமைகளை அவள்ஒவ்வொருவராகப் பார்வையிட்ட பின்னர் கிறெசென்சியாஎனும் அடிமையைத் தெரிந்தெடுத்தாள். கிறெசென்சியா அன்றுதொடக்கம் விற்றசைத் தனது பொறுப்பில் ஏற்றுக்கொண்டாள்.

கிறெசென்சியா அந்தஅழகிய குழந்தையை அன்பாகப் பேணிவந்தாள். தனக்கென்று ஒருகுழந்தைஇல்லாத இந்தஅடிமை அந்தப்பிரபுகுடும்பத்துப் பிள்ளையின்பால் தனது அன்பைச் சொரிந்தாள். அவளின்அரவணைப்பில் அந்தக்குழந்தையும் அல்லல் இன்றி வளர்ந்தது. சீமாட்டியுஞ் சந்தோஷமாகவாழ்ந்தாள். தனதுகுழந்தையை அந்தஅடிமை அன்போடு வளர்த்துவந்ததை அவள்கண்டு திருப்திகொண்டாள். கிறெசென்சியா அன்புள்ள அடிமைஎன்பதை மாத்திரம் இந்தச் சீமாட்டி அறிந்தாளேஅன்றி, அவள் ஓர்உத்தம கத்தோலிக்கபெண் என்பதை அவள் அறியவில்லை. அறிந்திருந்தால் கொடியஅதிகாரியாகிய வலேரியான்கையில் அவளைநிச்சயம்கையளித்திருப்பாள்.

## மூன்று சிநேகிதர்கள்

காலப்போக்கிலே குழந்தையும்வளர்ந்தது. அதன்சூழல், அதனைவளர்த்த அன்னையின் அன்பு, அவள்வாயிலிருந்து வந்தவார்த்தைகள், அவளின்செயல்கள் எல்லாம் அக்குழந்தையிலும் படிந்தன. விற்றசின் வாயிலிருந்துவந்த முதல் மழலைமொழி யேசுஎன்பது. அவன் இருசொற்களைச் சொல்லும்பருவம் வந்தபோது யேசுமரிஎன்னும் அதிபரிசுத்த நாமங்களையே சொன்னான். இவ்வாறாக உத்தமகத்தோலிக்க பெண்ணான கிறெசென்சியா தன்னிடம்ஒப்படைக்கப்பட்ட குழந்தையை உத்தம கத்தோலிக்க குழந்தையாகவே பயிற்றிவந்தாள். அவள் முழந்தாட்படியிட்டுச் செபிக்கும்போது விற்றசும் அவள்பக்கத்தில் முழந்தாட்படியிடுவான். அவள் நெற்றியிலே சிலுவைவரையும்போது விற்றசும் சிலுவைவரைவான். குழந்தையேசுவைப்பற்றிய வாழ்க்கைவரலாறுகளைக் கிறெசென்சியா சிறுசிறு கதைகளாகச் சொல்லிவந்தாள். அதனால் விற்றசும் தனது விளையாட்டுத் தோழருக்கு அநேககதைகளைச் சொல்லுவான்.

இந்த இருஉள்ளங்களுடன் மொடெஸ்ருஸ் என்பவனின் உள்ளமும் ஒன்றாகக்கலந்தது. மொடெஸ்ருஸ்என்பவனும் ஓர் அடிமையே. மொடெஸ்ருசும், கிறெசென்சியாவும், விற்றசும் ஒருதனிக்குடும்பமாக வாழ்ந்துவந்தனர். வளர்த்துவந்த தாய் தந்தையரே தனதுபெற்றோர் என்ற வகையில் விற்றஸ் அவர்கள்பால் தன் அன்பைச் செலுத்தினன். தன்னைப் பெற்ற தாய்தந்தையரைப்பற்றி அவன் அக்கறைகொள்ளவில்லை.

## நானும் ஒருகத்தோலிக்கன்

பலவருடங்கள் வந்து மறைந்தன. விற்றசும் வளர்ந்தான். கிறெசென்சியாவுடன் கூடிக்கொண்டு தேவஆராதனைக்குப் போனன். நிலஅறைகளிலும், மறைவானஇடங்களிலுமே அக்காலத்தில் தேவஆராதனைகள் இரகசியமாக நடைபெற்றன. கத்தோலிக்கரை வதைசெய்த வலேரியானின் காலம்அது. தேவஆராதனையில் பங்குபற்றுவோர் தமதுஉயிரைப் பொருட்படுத்தாமலே அப்படிச் செய்யவேண்டியிருந்தகாலம்அது. "கத்தோலிக்கன்" என்றசொல்லே அவர்களைக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோகப்போதிய குற்றம்பொருந்திய சொல்லாய்இருந்த காலம்அது. அந்தக்காலத்தில்தான் விற்றசும் ஞானஸ்நானம்பெற்றுக் கத்தோலிக்கனானன். முதற்தேவநற்கருணை பெற்றுக்கொண்டான். திவ்விய பூசைப்பலியில் பங்குபற்றினன்.

தேவஆராதனையில் பங்குபற்றும் ஏனையபிள்ளைகள் விற்றசின் தோழர்களாகிவிட்டனர். விற்றஸ் அவர்களுடன் விளையாடுவான். ஒருநாள் தேவஆராதனையின்பின் அவர்கள் விளையாடிக்கொண் டிருக்கும்போது கிலாஸ்பிரபு அவ்வழியேவந்தார். அந்தக்கத்தோலிக்கர் கூட்டத்தில் தமதுமகனைக் கண்டார். கண்டதும் அவர்கோபம் மட்டுக்குமிஞ்சியது. தமதுமகனின் தோளைப்பிடித்துக் குலுக்கி, "ஏன் இந்தநாய்களுடன் விளையாடுகிறாய்?" என்றுஉளறினர். விற்றஸ் பயத்தால் கிடுகிடுத்தான். ஆயினும், "இவர்களை ஏன் நாய்கள்என்கிறீர்கள்?" என்று கேட்டான். "ஏனெனில், இவர்கள் கத்தோலிக்கர்" என்று பதில்கிடைத்தது. விற்றசும் கத்தோலிக்கன்தான். வழுவழுத்த கத்தோலிக்கன் அல்ல, வைரம்பற்றிய கத்தோலிக்கன். தனது வேதவிசுவாசத்தை அறிக்கையிடுந்தருணம் விற்றசுக்கு வந்துவிட்டது. விற்றஸ் கலங்கவில்லை. தடுமாறவில்லை. நாக்குக் கொன்னிக்கவில்லை. தந்தை குலுக்கியகுலுக்கில் கிடுகிடுத்தவன் தந்தை சொன்னசொல்லில் விழுவிறுத்தான். "தந்தாய், நானும் ஒரு கத்தோலிக்கனே" என்று பதிலுரைத்தான். "நான் யேசுவையும், மாதாவையும் நேசிக்கிறேன்" என்றான்.

கோபத்துடன்நின்ற கிலாஸின் தலை கிறுகிறுத்தது. பிடித்தபிடியில் மகனைத் தனதுமாளிகைக்குக் கூட்டிச் சென்றார். அவனுக்கு நயங்காட்டிப் பேசினர். பயங்காட்டி ஏசினர். தடவிப்பார்த்தார்; தடியால் நையப் புடைத்துப் பார்த்தார். ஒன்றும் பலிக்கவில்லை. விற்றசோ, "நான் கத்தோலிக்கன்; என்றுங் கத்தோலிக்கனாகவே இருப்பேன்; நான் யேசுவை நேசிக்கிறேன்; அவர்தாயையும் நேசிக்கிறேன்" என்று விடாப்பிடியாய்த் தனதுவிசுவாசத்தை வற்புறுத்தினன்.

கல்நெஞ்சனானகிலாஸ் கலங்கவில்லை. கிலாசின் மகன் ஓர் கத்தோலிக்கனாக ஒருபோதும் இருக்கக்கூடாது என்பது அவன்தீர்மானம். விற்றஸ்ஒன்றில் தன் விசுவாசத்தை மறுதலிக்கவேண்டும், அன்றேல் விசுவாசத்திற்காக மரணம் அடையவேண்டும். அவன் கத்தோலிக்கனாக உயிர்வாழவே கூடாது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## அர்ச். பேதுருவானவரின் என்புகள்

“புதைபொருள் ஆராய்ச்சி வாயிலாகக் கண்டறியப்பட்ட மனுவருட்சிக்குரிய ஓர் சம்பவத்தை—அதாவது அப்போஸ்தலர்களின தலைவரான அர்ச். பேதுருவானவரின் திருஎன்புகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதைப் 12-ம் பத்திநாதபாப்பரசர் விரைவிலே பிரசித்தஞ்செய்யலாம்” மெனச் சென்ற 20-ந் திகதி சனிவாரம் ரோமைநகரிலிருந்து தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. அச்சமாச்சாரம் தொடர்ந்து தெரிவித்திருப்பது வருமாறு:

“ரோமைநகருக்குத் தெற்கே பதினேழுமைல்தூரத்தில் காஸ்தெல் கான்டல்போவிலுள்ள தமதுவேனிற்கால வாசஸ்தலத்தின் குளிர்ச்சிபொருந்திய ஏகாந்தத்திலே மிகமுக்கியமான இச்சம்பவத்தை எடுத்துக்காட்டும்சாதனங்களைப் பாப்பரசர் சித்தஞ்செய்து வருகிறாரெனத் தெரியவருகிறது. அடுத்துநிகழும் 1656-ம் ஆண்டு பங்குனி மாதம் 2-ந் திகதியன்று பூர்த்தியடையவிருக்கின்ற தமது 80-வது வயதின் ஞாபகார்த்தமாக அவர் ஓர்தொடர்பான விசேஷப்பட்ட சொற்பொழிவுகள்நிகழ்த்தத் திட்டமிடுகிறாரென அறிவிக்கப்படுகிறது.

“இந்த அறிக்கைகள், பாப்பரசரின் பிரத்தியேகசிற்றாலயத்திலே பூச்சியமாகக் காப்பாற்றப்பட்டுவரும் விலையேறப்பெற்ற சிமிழ்ஒன்றில் முதலாவதுபாப்பானவரான அர்ச். பேதுருவானவரின என்புகள் இருந்துவருகின்றனஎன்பதை இருவருடகாலத்துக்குமேல் நடைபெற்ற ஆராய்ச்சிகள் சந்தேகமற்றவகையிலே நிரூபித்துவிட்டிருக்கின்றனஎன்னும் குறிப்புரைகளுடன் ஒத்திருக்கின்றன.

“இத்திருஎன்புகள்கண்டெடுக்கப்பட்டிருப்பதைப் 12-ம் பத்திநாதபாப்பரசர்தாமே உறுதிப்படுத்துவாராயின் அது வத்திக்கானிலுள்ள அர்ச். பேதுருவானவர்மகாலயத்தின் பிரமாண்டமான கட்டுக்கோப்பின்கீழ் அகழ்ந்துநடத்திய பதினைந்துவருடகால வீரத்துவமான ஆராய்ச்சியின் வெற்றிகரமான முடிபைக் கருதுவதாகும். 1950-ம் ஆண்டு உலகமுழுவதுக்கும்விடுத்த தமது கிறிஸ்மஸ் செய்தியிலே, அம்மகாலயத்தின் உந்நதபலிபீடத்திற்கு நேர்கீழே அர்ச். பேதுருவானவரின் கல்லறை கண்டறியப்பட்டிருப்பதைப் பாப்பரசர் அறிவித்திருந்தார். அர்ச். பேதுருவானவர் கி. பி. 64-ம் அல்லது 67-ம் ஆண்டிலே அர்ச். பேதுருவானவரின் தற்போதைய மகாலயத்தின் பக்கமாகவிருந்த நீரோமன்னனின் சர்க்கஸ்சாலையில் வேதசாட்சியாயினர்.

“இத்திருஎன்புகள் பற்றிய விபரமானது சென்றஐந்துவருடங்களாக முற்றும் அந்தரங்கமாகவே இருந்துவரலாயிற்று. அவைகள் வத்திக்கான்மாளிகையின் மூன்றாவதுமாடியிலே பாப்பரசரின் படுக்கையறையின் பக்கமாகவுள்ள அவரதுபிரத்தியேக சிற்றாலயத்துக்கு மிகுந்த பூச்சியத்துடன் கொண்டுபோகப் பட்டனவென்று அப்போது தெரியவந்தது. அவைகளைப் பற்றி விஞ்ஞானரீதியாய்ப் பரக்க ஆராய்ச்சிநடத்த வேண்டுமென உத்தரவிடப்பட்டதென்றும் அப்போதுஅறிவிக்கப்படலாயிற்று.”

## வேனிற்கால மாளிகையில்

பரிசுத்தபாப்பரசர் சென்ற ஆடிமாதம் 30-ந் திகதியன்று ரோமைநகரிலிருந்து சுமார் 17 மைல் தூரத்திலே அல்பான் குன்றுகளிலுள்ள காஸ்தெல் கான்டல்போவில் இருந்துவருகின்ற தமது கோடைகால வாசஸ்தலஞ் சென்றிருக்கின்றார். அங்கேஅவர் வருகிற கார்த்திகைமாத இறுதிவரையில் தங்கியிருப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. தமது பதினறுவருட ஆட்சிகாலத்திலும் அவர் கோடைகால மாதங்களைக் கழிப்பதற்கென்று காஸ்தெல் கான்டல்போவிற்குச் சென்றிருப்பது, இது பதினொராம் முறையாகும். யுத்தம்நிகழ்ந்த காலமுழுவதும் அவர் வத்திக்கானிலேயே தங்கியிருந்தார். இம்முறைஅவர் காஸ்தெல் கான்டல்போவைப் போய்ச்சேர்ந்தபோது, அதன் மேயராலும், பட்டினசங்கத்தாலும் வரவேற்கப்பெற்றார். அங்குதங்கியிருக்குங் காலத்திலே அவர்கிரமமாகப் பொதுப்பேட்டிகள் அருளுவார். அதாவது வாரத்துக்கு இருபொதுப்பேட்டிகள் அருளுமாறு அவரின்சொந்த வைத்தியரான புறொபெசர் கலீஸி–லிஸிஅவர்கள் அவருக்கு அனுமதியளித்திருக்கிறார். அங்கே தங்கியிருக்கும் காலத்திலே மிதமிஞ்சியவேலைசெய்யாதிருக்குமாறு பாப்பரசரின் நாளாந்தஅலுவல்களை அவர் கூர்ந்து கவனித்துவருவார்.

## குருவாகவந்த யூதர்

சமீபத்திலேகுருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்ற மனந்திரும்பிய ஓர்யூதரான வண. கமில் கோள்ட் பார்வ் சுவாமியார் பெல்ஜியத்தைச்சேர்ந்த றொன் ஜெறென்நகரிலுள்ள அர்ச். லுட்காட்டின் கோவிலிலே தமதுமுதற்பூசைப்பலியை நிறைவேற்றினர். இந்தவிசாரணைப் பங்கின் குருவானவரே யுத்தகாலத்தில் இவரையும், இவர் குடும்பத்தினரையும் மறைத்துவைத்துப் பாதுகாத்தார். வண. கோள்ட் பார்வ் சுவாமியாரும், இவர் பெற்றாரும், இரு சகோதரரும் 1932-ம் ஆண்டு அங்குபோய்ச் சேர்ந்தார்கள். இவர்தந்தையார் டாச்சோவின் சித்திரவதைமுகாமில் மறைந்துபோயினர். சிறிதுகாலத்தின் பின் தாயாரும் மறைந்துபோயினள். மூன்று சகோதரர்களும் வண. கமில் எங்கின்பொஸ் சுவாமியாரால் மறைத்துவைக்கப்பட்டனர். இந்தச்சுவாமியாரும் ஜேர்மனியரின் கண்ணிற்படாது மறைந்திருந்தவர். சகோதரர் இருவரும் 1944-ம் ஆண்டு ஞானஸ்நானம் பெற்றனர். இவர்களின் சகோதரரான புதியகுரவர் கல்விகற்க லூவெயின் சர்வகலாசாலை சென்றிருக்கின்றார்.

## விடுதலைசெய்யப்பெற்ற குருமார்

கம்யூனிஸ்த ஆட்சி நடைபெற்றுவரும் செக்கோசிலவாகிய நாட்டிலே சென்றசிலவாரங்களில் அநேககுருமார் விடுதலைசெய்யப் பெற்றிருக்கின்றனர்; ஆனல், அவர்கள் திவ்விய பூசைப்பலி நிறைவேற்றாது தடைசெய்யப் பட்டிருக்கின்றனரென்று வீயென்னநகர் கத்தோலிக்க செய்திச்சேவை அறிவித்திருக்கின்றது. புடெவீஸ்நகரின் ஹிலவுச் மேற்றிராணியார் சிறையிலிருந்து விடுதலைசெய்யப்பெற்று, மொறாவியாவிலே தமதுசகோதரியுடன்போய் வசித்துவருவதாகச் சொல்லப்படுகிறது. அந்தரங்கமாகப் பூசைப்பலிநிறைவேற்ற இவருக்கு அனுமதிகிடைத்தபோதிலும் பொதுசனகடமைகளை நிறைவேற்றாது இவர் விலக்கப்பட்டிருக்கின்றார். அந்நாட்டின் முன்னைநாள் உள்நாட்டுமந்திரியும், கத்தோலிக்கரைத் துன்புறுத்துவதற்காக இரகசியப் பொலிசரைக் கையாடினவனுமான வக்லாங் நொசெக் என்பவன் தனது 63-ம் வயதிலே சமீபத்தில் இறந்துபோயினன். இவன் 1945-ம் ஆண்டுமுதல் 1948-ம் ஆண்டுவரை மந்திரிபதவி வகித்தகாலத்தில் சனநாயகநாடாயிருந்த செக்கோசிலவாகியாவை ஓர் பொலிஸ்நாடாக மாற்றிவிட்டான். கம்யூனிஸ்தஆட்சிக்கு எதிரிடையாய் இருந்துவருகிறார்களெனக் குற்றஞ்சாட்டி இவன் பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்கரையும், பிறரையும் கைதுசெய்யலானன்.

## கவிதாமணி மனந்திரும்பினர்

ஓர்புலவரும், உரைநடை எழுத்தாளருமான டேம் எடித் சிற்பெல் எனும்மாது மனந்திரும்பி நிகழும் ஆவணிமாதம் 4-ந் திகதியனறு லண்டன்நகரிலே டாம்வீதியிலுள்ள யேசுசபைக்கோவிலிலே கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொள்ளலாயினர். இந்த அம்மையார் இலக்கியப்பிரஸ்தாபம்பெற்ற சகோதரரான சேர் ஒஸ்பேட் சிற்பெல், திரு. சாச்வெறெல் சிற்வெல் என்பவர்களின் சகோதரியாவர். இவரின் முதற்செய்யுள்நூல் 1915-ம் ஆண்டு பிரசுரஞ்செய்யப்பட்டது. இக்கால நவீனவாக்கியங்கள், கவிதைகளைக்கொண்ட வருடாந்த இலக்கியசஞ்சிகையாகிய “வீற்ஸ்” எனும் வெளியீட்டின் ஆசிரியராயும் இவர்விளங்கியிருந்தார். இவர்எழுதிய சிறந்த வசனநடைநூல்களுள் ஓர் கத்தோலிக்க கவிஞரான அலெக்சாண்டர் போப்அவர்களின் சீவியவரலாறுபற்றியதும் ஒன்றாகும். இந்தக்கவிதாமணியின் இல்லம் டேர்பிஷயரிலே இருந்துவருகிறது. நாடுபுறத்திலுள்ள மகாஅலங்காரமான ஆங்கில மனைகளில் அதுவும்ஒன்றாகும்.

## சற்பிரசாதம் பரிமாறிய சிறுவன்

ஆர்ஜென்ரீனவிலே பெறோன்கட்சியினர் கலகம்விளைத்தபோது, ஆனி 17-ந்திகதியன்று அவெல்லானெதாஎனும் ஊரிலுள்ளகோயிலில் வேதவிரோதிகள்புகுந்து பங்குக்குருவானவரையும், அவருடைய உதவிக்குருவானவரையுங் கைதுசெய்தனர். பங்குக்குருவானவர் கோயிலை விட்டு அழைத்துச்செல்லப்படுகையில், அங்கிருந்தவிசுவாசிகளைப் பார்த்து, “திவ்வியநற்கருணை அப்பங்களைப் புசித்துவிடுங்கள்” என்று கூறிச்சென்றார். கிறீஸ்துவர்கள் அங்கிருந்த ஒருசிறியபையனைத் தெரிந்துகொண்டு, அவன் செய்யவேண்டியது இன்னதெனச் சொல்லிக்கொடுத்தபிறகு, நன்மை வாங்கக் கூடியவர்களெல்லாரும் கிறாதியண்டைசென்று முழந்தாளிடுமாறுகூறினர். அந்தப்பையன் பாத்திரம் காலியாகிறவரையில் சற்பிரசாதம் பரிமாறினன்.

## பாதிரியாரும் பாரியாரும்

இங்கிலாந்திலே கேர்க்கிலி பட்டினத்தில் அங்கிளிக்கன் புறொட்டஸ்தாந்த சபையைச் சேர்ந்த சென்பீற்றர் ஆலயபங்கிலே ஏழுவருடகாலம் விசாரணைப்பாதிரியாராயிருந்த கனம். கௌரவ பற்றிக் ஜோண் ஹெப்பேண்–ஸ்கொட் அவர்கள் தமது பாரியாருடன் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொள்ளவிருக்கின்றார். இதுவிஷயமாய் அவர் தமதுபங்கின்சஞ்சிகையில் எழுதியவிடத்து, “நான் விட்டுநீங்கஆசிப்பது சென்பீற்றர்ஆலயபங்கை அல்லவென்று தான் முந்தநான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனல், நான் விட்டுநீங்குவது இங்கிலாந்துச் சபையையேயாகும். அதற்குக்காரணம், ரோமான்கத்தோலிக்க திருச்சபையே உண்மையான பரிசுத்த கத்தோலிக்க திருச்சபையென்றும், இங்கிலாந்துச்சபை அதில் ஒருபகுதியல்லவென்றும் நான் கண்டறிந்துகொண்ட பலநியாயங்களையுமிட்டு நெடுங்காலமாக விசுவசித்துவர நேர்ந்தமையேயாகும்” என வெளியிட்டிருக்கின்றார். கனம். ஹெப்பேண் – ஸ்கொட் பாதிரியார் லோட் பொல்வார்த் பிரபுவின் மாமனர். கேம்பிறிட்ஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த திறினிற்றிக்கல்லூரியின் எம். ஏ. பட்டதாரியும், ஒக்ஸ்போட்டிலே குடெஸ்டன் வேதசாஸ்திரகல்லூரிப் பழையமாணவருமாவர். 55 வயதுடையவரான இவர் கடந்த 25 ஆண்டுகளாக ஓர்அங்கிளிக்கன்சபைப் பாதிரியாராய் இருந்துவந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணி மாதம்

**பொதுக் கருத்து:** கிறீஸ்துவ தர்மப்படி மக்களிடையே அமைதியும், ஒத்துழைப்பும் அதிகரிக்கும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** ஆசியாவில் கிறீஸ்துவ தர்மப்படி விவாகமும், குடும்பவாழ்க்கையும் நடைபெறும்படியாக மன்றாடிக் கொள்வது.


சத்தியவேத
# பாதுகாவலன்

1955-ம் ஆண்டு
ஆவணி மாதம் 25-ந் திகதி


## குருப்பட்டம்

இங்கிலாந்திலே கோட்பீல்ட் எனுமிடத்தில் அப்போது சிறந்த தேவபக்தியுள்ள ஓர் சீமாட்டி வசித்திருந்தாள். செபத்திலே சிறந்தபலன் கண்ட அச்செல்வச் சீமாட்டியானவள் இன்று கத்தோலிக்க உலகம் முழுவதும் கண்டுபாவிக்கத்தகுந்த ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றாள். ஓர் குன்றின் உச்சியில் அமைந்துள்ள தனது அழகிய மனையிலே அவள் சஞ்சரித்திருந்து, தான் ஆசிக்குங் காரியம் அனுகூலமாகும்படியாகச் செபஞ்செய்தாள். ஒருநாள் அல்ல, ஒருமாதம் அல்ல, ஒருவருடம் அல்ல, ஆனால், இருபதுவருடகாலமாகத் தனது குடும்பசிற்றாலயத்திலே தினமும் ஒருமணிநேரம் திவ்வியநற்கருணைக்கு முன்பாகச் செபஞ்செய்து வந்தாள். கடைசியாக, அவள் ஆசித்த கருமம் அனுகூலமாயிற்று. அதனால், "சர்வேசுரனிடமிருந்து நான் சகலத்தையும் பெற்றுக்கொண்டேன்; சகலரையுமே சர்வேசுரனுக்குக் கையளிக்கிறேன்" என்று ஆனந்தபரவசத்துடன் கூறிநின்றாள்.

அவள் தனதுபிள்ளைகள் எல்லோருமே தேவஅழைத்தலைப் பெற்றுத்திருச்சபைக்குச் சேவைபுரியவேண்டுமென ஆசித்தாள். அவளுக்குப் பதின்மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். புத்திரர்களில் ஆறுபேர் குருமாராயினர். இவர்களிலும் ஒருவர் கருதினலாயும், ஏனைய இருவர் மேற்றிராணிமாராயும் வந்தனர். அவளுடையபுதல்விகளில் நால்வர் கன்னியாஸ்திரிமாராயினர். எலிசா வாண் என்ற இந்தப்பிரபுத்துவசீமாட்டி புரொட்டஸ்தாந்த பெற்றோரிடமிருந்து பிறந்தவள். ஓர் புரொட்டஸ்தாந்த மாதுவாக வளர்ந்தவள். அந்த இராச்சியத்தின் அதிகம்புராதனமும், கலங்காத பக்திவைராக்கியமுள்ள கத்தோலிக்க குடும்பங்களுள் ஒன்றின் தலைவரான கோட்பீல்ட்டின் கர்ணல்ஜோண் பிரான்சீஸ் வாண் எனும்சீமானை மணஞ்செய்வதற்குச் சிறிதுகாலத்தின்முன்னரே கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொண்டாள். குருமாராகவும், கன்னியாஸ்திரிமாராகவும் போகும்படி தனதுபிள்ளைகளை அவள்கட்டாயப்படுத்தவுமில்லை. அவர்கள்மட்டிலே கண்டிப்பாக நடந்துகொள்ளவுமில்லை. சாகிறதற்குச் சற்றுமுன்னதாகவே அந்தஇரகசியத்தைத் தனதுபிள்ளைகள் குருமாராகவும், கன்னியாஸ்திரிமாராகவும் வந்தஇரகசியத்தை—நாளாந்த ஒருமணிநேரச் செபத்தில் தான் கேட்டுவந்தஇரகசியத்தை—சொல்லாமற்சொல்லியும், காட்டாமல் காட்டியும் தேவஅழைத்தலின் பாதையிலே அவர்களை வழிநடத்திவந்த இரகசியத்தை வெளியிட்டாள். கருதினல் ஹெர்பேட் வாண்முதலாம் தனது பத்துப்பிள்ளைகளைத் தேவதொண்டுக்கு அர்ப்பணஞ்செய்த இந்தப்புண்ணியவதியைப்போன்ற அநேகந்தாய்மாரே இன்று கத்தோலிக்க உலகமுழுவதும் அத்தியாவசியம் தேவைபடுகின்றனர். அதனால், குருப்பட்டாபிஷேகங்கள் நடக்குந்தோறும், புதிய குருமார் உதயமாகுந்தோறும் அவர்களின் பெற்றோர்—விசேஷமாய்த் தாய்மார் அவர்களைக் குருமாராக்காண என்னதவஞ் செய்தனரோ! எந்தெந்தத் தலங்களுக்குத் திருயாத்திரை செய்தனரோவென்று நாம்சிந்தனை செய்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

நிற்க, கருணையங்கடவுள் யாழ்ப்பாண மேற்றிராசனத்திற்கு மேலும் இருபுதிய குருப்பிரசாதிகளைத்தரக் கிருபை பாலித்ததற்காக அவருக்கு மிகுந்த நன்றியறிந்ததோத்திரஞ் சமர்ப்பிக்கின்றோம். இருகுரவர்களிலும் வண. எவ். யோசெவ் நவரட்ணம் சுவாமியவர்களின் தந்தையாரும், சம்பத்திரிசியார்கல்லூரி ஆசிரியர்களில்ஒருவராயிருந்து சிலகாலத்தின்முன் இளைப்பாறியவரும், தற்போது அக்கல்லூரிவிடுதிச்சாலை உதவிவார்டனைக் கடமையாற்றி வருகிறவருமான திரு. எஸ். பிரான்சீஸ் அவர்கள் நமது கலாசாலைத் தோழர்என்றமட்டிலே அவரை நெடுங்காலமாகநாம் அறிவோம். அவர் மாதகலிலே சிறந்தவோர் சைவக்குடும்பத்தில் பிறந்தவர். ஓர் இளைஞராயிருந்து கல்விகற்றுவருங்கால் தமதுகத்தோலிக்க உடன்மாணவரின் நன்முன்மாதிரிகையாலே மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையைத் தழுவிக்கொண்டவர். அவர் கத்தோலிக்கரானபோது தமது சுற்றத்தவரால் எவ்வளவோ இம்சிக்கப்பட்டார். அடி ஆக்கினையால் துன்புறுத்தப்பட்டார். ஆனால், அவரோமனந்தளராது, வேதத்தில் வீரத்துவமாக நிலைகொண்ட சம்பவத்தை நாம் அறியவந்ததுமுதல் அவர்பால் என்றும் பெருமதிப்புக் காண்பித்துவரலாயினோம்.

மற்றப்புதியகுரவரான வண. ஜே. பிரான்சீஸ்சுவாமியார் நம் பட்டணத்திலே ஓர்வியாபாரியான திரு. பஸ்தியாம்பிள்ளை யோசெவ் இராசையா அவர்களின் சிரேஷ்டபுதல்வர். இவர் அநேககுருமாரை யாழ்ப்பாணத் திருச்சபைக்குத்தந்த நாரந்தனையைத் தமது ஜனனபதியாகக் கொண்டவர். இப்புதிய குரவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்திருச்சபை உத்தியானத்திலே தேவதோத்திர வாஞ்சையோடு ஆன்மாக்களின் இரட்சணியத்துக்காக நெடுங்காலம் திருத்தொண்டாற்றிவரக் கருணைபாலிக்குமாறு எல்லாம் வல்லஇறைவன் திருவருளை இரந்துநிற்கிறோம்.



## சதாசகாயமாதா கோணம்

### குடிவெறியை நிறுத்திய என்கணவர்

"எங்களுக்குத்தேவையான சகல வரப்பிரசாதங்களும், எங்கள் அவசரங்களுக்குரிய சகலஉதவிகளும் தேவதாயார்மூலமாகவே கிடைக்கின்றன" என்று ஆர்ச். சாமிநாதர் சபையைச் சேர்ந்த வேர்ணடோசுவாமியார் கூறுகிறார். இதைவேறுவிதமாகச் சொல்லுகில், மரியாயே நமது சதாசகாயமாதாவாகவிளங்குகின்றாள். அவ எங்கள் எந்தஅவசரத்திலும், எந்தநேரமும் உதவிசெய்ய அவளோடு காத்துக்கொண்டிருக்கிறாள். அவளின் சலுகையைத் தேடிச்செல்வோர் அதையடையாமற்போவது அருமையிலருமை. சதாசகாயமாதாவின் நவநாட்பத்தி உலகெங்கும் காட்டாக்கினிபோலப்பரவி ஆயிர, பதினாயிர, இலட்சக்கணக்கான கத்தோலிக்கருக்கும், கத்தோலிக்கரல்லாதோருக்கும எத்தனையோ இகபர நன்மைகளை அள்ளிச்சொரியும் வாய்க்காலாகத் திகழ்கின்றது. சதாசகாயமாதாமூலம் அடைந்தநன்மைகளுக்கு நன்றியறிந்ததோத்திரம் அனுப்புவோரின்நாமங்கள் ஏட்டில்அடங்கா. சதாசகாயமாதாவின் சலுகைபெற்றஒருவர் எழுதியகடிதமொன்று இதன்கீழ்ப் பிரசுரிக்கப்படுகிறது:

"பலவருடங்களாகத் தீராதகுடிகாரனாய், தினவெறியனாய்த்திரிந்த என் கணவனை நான் என்சுயமுயற்சியால் எவ்வளவோ கெஞ்சிமன்றாடியும், புத்திகூறியும் திருத்தமுயன்று முடியாமல் அங்கலாய்த்தேன். ஆனால், தாயின் இரக்கத்தையும், புதுமையையும் கேள்விப்பட்டு ஒன்பதுவாரப் பக்திவணக்கத்திற் பங்குபற்றிப் பூசையுஞ்செய்விப்பேனென வாக்குப் பண்ணினேன். என்னபுதுமை? நான் பக்திவணக்கத்திற்பங்குபற்றிய 3-ம்வாரமே என்கணவர் தாமாகவே, 'இனிமேல் ஒருபோதுங் குடிப்பதில்லை'என்றஉறுதியான தீர்மானங்கொண்டு எனக்குவாக்குத்தந்தார். என் மனங்குளிர்ந்தது. என்வாழ்வுமலர்ந்தது. என் குடும்பவாழ்க்கையில புதியநம்பிக்கை உதயமானது.

"இத்தகையபுதுமைசெய்த தாயின் மட்டில் இருக்கவேண்டிய அத்தியந்த நன்றி என்மனதைவிட்டு மெல்லமெல்ல அகன்றது. வாக்குப்பண்ணியபடி 8-ம் 9-ம் கிழமைப் பக்திமுயற்சியிற் பங்குபற்றாது விட்டுவிட்டேன். என்மறதியை, நன்றிகெட்டதனத்தை, பிழையை என்ன அற்புதமாக மாதா உணர்த்தினா! அடிப்பதும், அணைப்பதும் தாயல்லவா? அந்த 9-ம்கிழமையை என்னால்மறக்கவே முடியாது. அன்றிரவு நினைத்தால் இன்று நினைக்கும் போதும் என்தேகஞ் சிலிர்க்கிறது.

"அன்றிரவு அயர்ந்தநித்திரையில் இருந்தேன். வாசல்கதவைப் பலமாக யாரோ தட்டினார்கள். ஓடிச்சென்று கதவைத்திறந்தேன். அப்போதுகண்ட பயங்கரகாட்சி என்னை அலறச்செய்துவிட்டது. சிலர் என்கணவனைக் கைத்தாக்கலாகத் தூக்கிக்கொண்டுவந்தார்கள். கால்ஒன்று துண்டிக்கப்பட்டு இரத்தங் கொட்டிக்கொண்டேயிருந்தது. உடை இரத்தந்தோய்ந்திருந்தது. அவ்விதநிலையிலும் குடித்துக் குறையாயிருந்த சாராயப்போத்தலை நெஞ்சோடுஅணைத்து, இறுகப்பிடித்திருந்தார். 'ஐயோ! உங்களுக்கு இக்கதியா?' என்று அலறியஎன்னை அப்போதும் கண்டபடி ஏசினார். என் இதயம் வெடித்துவிடும்போல இருந்தது. துடித்துப்பதைத்துப் படுக்கையைவிட்டெழுந்தேன். இதைக்கனவுஎன்று என்னால் நம்பமுடியவில்லை. தேகம் நடுங்கியது. வியர்த்தது. அப்போதுதான் 'சதாசகாயமாதாவே!' என்ற வார்த்தை என்வாயிலிருந்து புறப்பட்டது. நான்கூப்பிடமுன் என்னிடம் வந்தா, எனக்குஆறுதல்தந்தா. நான் மறந்தேன். அவவோ மறக்கவில்லை. என்குழந்தைகள், என்கணவன், பாவியாகியநான் — இல்லை, உலகிலுள்ள எல்லோரும் — அவவின்பிள்ளைகள் — அவஎல்லோரையும் தன்பார்வையுள் வைத்துக் காப்பாற்றுவாவாக."

சதாசகாயமாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## NOTICE TO THE CLERGY

The Reverend Fathers are all requested to recite during the Mass the prayer "Ad postulandam Gratiam Spiritus Sancti" as Oratio Imperata pro re gravi simpliciter, during the period of the Annual Retreat of the Fathers (i.e. till the 1st September). The Prayer from the Mass of the Holy Rosary—the Oratio Imperata now in force—is suspended till further instruction.

✠ **J. Emilianus Pillai, O.M.I.,**
Bishop of Jaffna.
23-8-55.

## சுதேச வர்த்தமானம்

### குருப்பட்டமும் கீழ்ப்பட்டங்களும்

கொழும்பு, கொட்டாஞ்சேனை சந்தலூசியாவின் ஆசனக்கோவிலிலே கொழும்பு அதிமேற்றிராணியாண்டவர் நேற்றுப் புதன்கிழமைகாலை வண. எஸ். யோசெவ் நவரடணம், வண. ஜே. பிரான்சீஸ் சேவியர், வண. மாக்ருபசிங்கனும் பிறதர்மார்மூவருக்கும் குருப்பட்டமும், மற்றோர்பிறதருக்குத் தியாக்கோன்பட்டமும், வேறுஐந்து பிறதர்மாருக்கு உபதியாக்கோன்பட்டமும், வண. ஜே. பி. தேவராசா, வண. ஹில்லறி வேதநாயகம், வண. மேரி யோசெவ் சூலைசப்பிள்ளை, வண. சேவியர் லோறென்ஸ்பிள்ளை முதலாம் பன்னிருவருக்கு மற்றுங்கீழ்ப்பட்டமும் அருளலாயினர்.

### அழுகிப்போதும் வெங்காயம்

யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயம் ஏற்றுமதி செய்வதற்குப் போதிய சாமான்பெட்டிகளை றெயில்வேப்பகுதி விட்டுக்கொடுக்க இயலாதிருக்குங் காரணமாக இங்குள்ள பலகிராமங்களிலும் வெங்காயம் தொன்கணக்கிலே அழுகிப்போகின்றன. உத்தரவாத விலைத்திட்டத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்திலுள்ள பெருந்தொகையானகமக்காரர் வெங்காயச்செய்கையில் ஈடுபட்டார்கள். ஆனால், அவர்கள் உற்பத்திசெய்தவெங்காயம் விலைக்கு வாங்கப்படும் என்பதற்கான உத்தரவாதம் தற்போதில்லை. தினமும் கமக்காரர் யாழ்ப்பாணத்திலுள்ள 30 கூட்டுறவுக் கமத்தொழில்உற்பத்தி—விற்பனவுச் சங்கங்களினதும் வளவுகளைமுற்றுகையிட்டுத் தங்கள்வெங்காயத்தைச் சங்கங்கள் வாங்கவேண்டுமெனக் கேட்

டுக்கொண்டு வருகிருர்கள். ஆனல், இச்சங்கங்களிலே அநிகப்பற்ருனவைகள் வெங்காயத்தைவாங்கிப் போட்டு வைப்பதற்கான இடவசதியற்றனவாய் இருக்கின்றன. அதனல் யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயத்தை ஏற்றுமதிசெய்யத்தக்கதாய் அதிகமான சாமான்பெட்டிகளை றெயில்வேப்பகுதி விட்டுக்கொடுக்குமிடத்துத்தான் வெங்காயத்தை வாங்கமுடியுமென்று அவைகள் கூறுகின்றன. 42 சங்கங்களுக்குமாக வாரம்ஒன்றுக்கு 104 சாமான் பெட்டிகளே விட்டுக்கொடுக்கப்படுவதாக அவைகள்முறையீடு செய்கின்றன.

## முத்துக்குளிப்பு நடைபெறுமா?

இலங்கைக்கரைகளை அடுத்துள்ள கடல்களிலே அடுத்துநிகழும் 1956-ம் ஆண்டு மாசி அல்லது பங்குனிமாதத்தில் முத்துக்குளிப்பு நடைபெறுமெனத் தெரியவருகிறது.

## திருமண வைபவம்

நம்பட்டணவாசரான திரு. ரி. ஜேம்ஸ் தம்பதிகளின் இரண்டாவதுபுதல்வரும், நமது அச்சகத்திலே 'போர்மன்' பதவி வகித்திருப்பவருமான திருவளர் செல்வன் நிக்கலஸ்ஜேம்ஸ் அவர்களுக்கும், நாரந்தனைவாசரான திரு. பி. அந்தோணிப்பிள்ளை தம்பதிகளின்புதல்வியும், யாழ்ப்பாணக் கன்னிகாமடத்துப் பாடசாலையில் ஓர்ஆசிரியையாய் இருந்துவருகிறவருமான திருவளர் செல்வி மேரிமார்கறெற்றுக்கும் சென்ற 20-ந்திகதி சனிக்கிழமைகாலை பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே குருமாரும், மற்றும்திரளான இனசனர்சிநேகிதரும் குழுமியிருந்த சமூகத்திலே மணவாளனின் சுற்றத்தவரான வண. ஜே. எவ். சேவியர்சுவாமியவர்களால் மெய்விவாகத் திருச்சடங்கு நிறைவேறியது. அதன்மேல் நாரந்தனைக்கட்டளைக் குரவர் வண. ஜோண்மேரிசுவாமியவர்கள் திவ்விய பூசை நிறைவேற்றினர். பின்னர் புதியதம்பதிகள் பரிமேலர் எஸ். அருளானந்தம்அவர்களால் மாலைசூட்டிச் செண்டளிக்கப்பெற்று, மோட்டார்ரதாரூடாரய்ப் பெரியஊர்வலமாகநகரசபை மண்டபத்தையடைந்து அங்கே பெருந்திரளான பிரமுகர்களும், பெண்மணிகளும் தேங்கியிருந்த சமூகத்திலே பெரிதும்ஆடம்பரமாக வரவேற்றுஉபசரிக்கப் பெற்றனர். அவ்வேளை பாதுகாவலன் பத்திரிகாசிரியர் இனியதோர் சொற்பொழிவாற்றிப் புதுமணத்தம்பதிகளுக்குச் சோபனவாழ்த்துக் கூறிநின்றார். இப்புதியகுடும்பமானது பல்லாண்டுப் பெருவாழ்வுவாழ எல்லாம்வல்ல இறைவன் திருவருள்பாலிப்பாராக!

> **மலை இடம்மாறி விட்ட தென்பதைக்கூட நம்பிவிடலாம். ஆனல், மனிதன் குணம் மாறிவிட்டானென்பதை இலகுவில் நம்பிவிட முடியாது.**

✳ சோவியத்ருஷியாவின் பாராளுமன்றத்திலே அரசாங்கம் கொண்டுவந்த எந்தஒருபிரேரணைக்கும் பிரதிநிதிகளுள்எவராவது "இல்லை" என்று அட்டிசொன்னதுண்டா?
ஒருபோதுமேயில்லை.

✳ பூமியிலே மனிதர்களும், மற்றும்பிராணிகளும் உயிர்வாழ்திருக்கச் சீனியும் மிகஇன்றியமையாததாகும். எந்தஒருமிருகமுந் தனதுஇரத்தத்தில் சீனியைக்கொண்டிராவிடில் சொற்பகாலத்தில் இறந்துபோகும்.

✳ பனிஎப்போதும் வெண்மையாயிருப்பதில்லை. ஆதிகாலமுதல் சிவப்பு, பச்சை, மஞ்சள், கருமைஆகியாம் பல நிறமுள்ளபனி விழுந்துகொண்டு வருகிறது.

# கொழும்புநகரின் உடன் பாதுகாவலர் அர்ச். லவுறேஞ்சியார்




கொழும்புநகர கத்தோலிக்கருக்கு — அவர்களிலும் விசேஷமாய் வெள்ளவத்தைக் கத்தோலிக்கருக்குப் பெருமகிழ்ச்சியையும், பெருமையையும் அளிக்கும் திருவைபவமொன்று சென்ற ஞாயிற்றுக்கிழமைமாலை நிகழலாயிற்று. அர்ச். லவுறேஞ்சியாரின் திருநாளைக் கொண்டாடுவதற்கும், அத்திருவைபவத்திற்குமாக இலங்கையின் சகலபகுதிகளிலுமிருந்தே பெருந்திரளான கத்தோலிக்காசென்று வெள்ளவத்தையிற் குழுமியிருந்த சமூகத்திலே கொழும்பு அதிமேற்றிராணியாணடவர் பரிசுத்தபாப்பரசரின் அனுமதியோடு சந்தஹூசியாவுடன் கொழும்புநகரின் உடன் பாதுகாவலராக அர்ச். லவுறேஞ்சியாரையும் பிரகடனஞ் செய்தமையே அத்திருவைபவமாகும். அதற்குமுன் அர்ச். லவுறேஞ்சியாரின பழைய கோவிலிலிருந்து அவர்திருச்சுரூபம் பாண்டுவாத்திய வரிசைகளுடனும், தேவகீர்த்தனைகள், பிரார்த்தனைகளோடும் பெரிய ஊர்வலமாகப் பெறேரு ஒழுங்கைக்குக் கொண்டுசென்று அங்கே அவர்பேரால் ஒன்றேமுக்கால் ஏக்கர்நிலத்தில் கட்டியெழுப்பப்பட்டுவரும் அழகிய பெரியஆலயத்தில் ஸ்தாபிக்கப் படலாயிற்று.

இது ஆச்சரியமாகத்தோன்றலாம்! ஏனெனில், ஓர்நகருக்கு அல்லதுநாட்டுக்கு ஒருவரையே பாதுகாவலராக ஏற்படுத்திக் கொள்வது பொதுவானவழக்கம். ஆனல், இலங்கைச்சரித்திர ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்த சிலஉண்மைகளை நோக்குமிடத்து, இதுநீதியான செயல்என்பதை எவருமே மறுக்கமுடியாது. 450 ஆண்டுகளின்முன்னே கொழும்பை ஒருநகரமாகக் கட்டத்தொடங்கியவர்களால் அந்நகரின் பரலோகபாதுகாவலராக அர்ச். லவுறேஞ்சியார் கொள்ளப்பட்டு வந்தார். ஆனல், கத்தோலிக்கருக்குச் சமயசுதந்திரம் அளிக்க ஒல்லாந்தர்மறுத்த 150 வருடகாலத்திலே இது மறக்கப்பட்டபடியால், ஆங்கிலேயர்காலத்தில் மீண்டும் கோவில்களைக் கொழும்பிலே கட்டியெழுப்பிய கத்தோலிக்கர் சந்தஹூசியாவை அந்நகரின் பரலோகபரிபாலியாக எடுத்துக்கொண்டனர்.

லவுறேஞ்சியார் அக்காலத்திலே கொழும்புநகரின் பாதுகாவலராகக் கொள்ளப்பட்டாரென்பதில் எள்ளளவுமே ஐயம் இல்லை. கொழும்பிலேகோட்டை வட்டாரத்தில் இலங்கைத் தேசாதிபதிவதியும் மாளிகையை அடுத்து "கோர்டன்" பூந்தோட்டத்திலே உலாவப்போகிறவர்கள் ஒருகற்பாறையைக் காண்பார்கள். அதிலே போர்த்துக்கேய அரசனின் இலாஞ்சனை செதுக்கப்பட் டிருக்கிறது. அதன் அடியிலே ஒருவாசகமானது, இந்தப்பாறை அர்ச். லவுறேஞ்சியாரது புராதன கோவிலுக்கு எதிரே அதுமுன்னிருந்த இடத்திலிருந்து இங்கே கொண்டுவரப் பட்டதெனக் கூறுகின்றது. ஆம், 1505-ம் ஆண்டிலே போர்த்துக்கேயர் கொழும்பில் முதன்முதலாக இறங்கியபோது அவர்களின் தலைவனை லொறெஞ்சோ-தி-அல்மேதாஎன்பவர் கொழும்புக்கோட்டைமுனைக்கு அண்மையிலே ஒருசிறுகோவிலைக் கட்டுவித்து அதனை அர்ச். லவுறேஞ்சியார் கோவில்என்று அழைப்பித்தார். அதுவே நாம்அறிந்த அளவில் இலங்கையின் முதற் கிறீஸ்துவ ஆலயமாகும். இங்கேயே முதற்பூசைப்பலியும், ஆராதனையும், கிறீஸ்துநாதரைப்பற்றிய அறிவுரைகளும் நடைபெற்றிருத்தல் வேண்டும். பிற்காலத்திலே போர்த்துக்கேயர் இக்கோட்டைப்பகுதியில் வசிக்கத் தொடங்கியபோது துறைமுகத்தை "அர்ச். லவுறேஞ்சியார்குடா" என்றும், மற்றுஞ்சிலபகுதிகளை "அர்ச். லவுறேஞ்சியார்முனை" "அர்ச். லவுறேஞ்சியார் குன்று", "அர்ச். லவுறேஞ்சியார்தெரு" என்றும், கொழும்பையே "அர்ச். லவுறேஞ்சியார்நகரம்" என்றும் அழைத்துவந்தனர். அர்ச். லவுறேஞ்சியாரை நகரபாதுகாவலராகக்கொண்டு அவர் வேதசாட்சியாகமரித்த சாதனமாகிய மாமிசம்வதக்கும் இரும்புக்கிழ்த்தட்டு (Gridiron) ஆகிய அவருடையவிருதினை இலங்கையில்வழங்கிய போர்த்துக்கேய நாணயங்களிலும் பொறித்தனர். சிலஎழுத்தாளர்கள் அவரையே முழுஇலங்கைக்கும் பாதுகாவலரென்றும் கூறியிருக்கின்றனர்.

இவ்வர்ச்சியசிட்டர் ஸ்பானிய நாட்டிலே பிறந்து, ரோமாபுரியிலே கல்விபயின்று, குருத்துவப்பட்டத்திற்குஅடுத்த தியாக்கோன் பட்டத்தைப்பெற்று, வாலிபவயதிலே அக்காலத்துப் பாப்பானவரால் கோவில்நிதிகளின் பொறுப்பாளியாக நியமிக்கப்பட்டிருந்தார். வலேரியான் என்னும் கொடிய ரோமைச் சக்கரவர்த்தி கிறீஸ்துவர்களைப் பிடித்துச் சித்திரவதைசெய்த காலத்திலே நடக்கப்போவதை உணர்ந்தபாப்பானவர் அவரை அழைத்து, கோவில்நிதிகளை வறியவர்களுக்குக் கொடுக்கும்படி கற்பித்திருந்தார். பாப்பானவரைக் கொலைக்களத்திற்குக் கொண்டுபோகும்பொழுது லவுறேஞ்சியார் அவரைப் பின் தொடர்ந்துசென்று, அவர் கற்பித்தவாறு தாம் பணத்தை வறியவர்களுக்குப் பங்கிட்டு விட்டதாக அறிவித்தார். இதனைச் சேவகர்கள் சக்கரவர்த்திக்கு அறிவிக்கவே, அவன் லவுறேஞ்சியாரையும் கைதுசெய்வித்துச் சிறையிலிட்டுப் பணத்தை அபகரிக்க முயன்ருன். அவரும் அதனைஒப்படைக்க மூன்றுநாட் தவணை கேட்டுவிட்டுப்போய்க் குருடர், செவிடர், முடவர்முதலிய வறியவரைச் சொன்னநாளிலே வரிசையாக அவனுக்குமுன் நிறுத்தி, "திருச்சபையின் பொக்கிஷம் இவர்களே" என்ருர். அரசன் கோபாவேசங் கொண்டு அவருக்குச் சொல்லமுடியாத விதம்விதமான கொடிய வேதனைகளை விதித்தான். அவரோ ஒன்றினலும் மனந்தளராமலும், உயிர் போகாமலும் இருப்பதைக் கண்டு மாமிசம்வதக்கும் இரும்புக்கட்டிலொன்றில அவரைக் கிடத்தி நெருப்பைக் கீழேமூட்டிச் சுடுவித்தான்.

ஒருபக்கம் வெந்தபிறகு லவுறேஞ்சியார் அரசனைநோக்கி: "இப்போது இந்தப்பக்கம் நன்ருய் வெந்திருக்கிறது; அதனைத் திருப்பிப்போட்டு வெந்த இறைச்சியைச் சாப்பிடலாம்" என்று புன்னகையுடன்கூறி வேதசாட்சியாக உயிர்நீத்தார். இதனைக்கண்ணுற்ற ரோமைப் பிரபுக்கள்பலரும், செனற்றர்களும், ஏனையோரும் கிறீஸ்து சமயத்தைத் தழுவலாயினர். அன்றுதொட்டு ரோமைஇராச்சியத்திலே அஞ்ஞானம அருகவும், மெய்ஞ்ஞானம் பெருகவும் தொடங்கிற்று. இவ்வர்ச்சியசிட்டரின் வேண்டுதலால் ரோமாபுரியிலே நமபமுடியாதவிதமாகப் பெருந்தொகையான புதுமைகளை ஆண்டவர் செய்தருளினர்என்று பேர்பெற்ற வேதபாரகரான அர்ச். அகுஸ்தீனரே கூறியுள்ளனர். லவுறேஞ்சியாரின் வெள்ளவத்தைப் புதியகோவில் கட்டிமுடிந்ததும் அதுஅளிக்கவிருக்கும் அழகிய தோற்றமானது கொழும்புக்கே ஒருமகிமையும், பெருமையுமாகவிருக்கும். அதன்முகப்பிலே 20 அடிச் சதுரநிலத்தில் எழுப்பப்படும் 115 அடி உயரமான ஓர்அழகுசொட்டும் கோபுரம் அதனை அணிசெய்துநிற்கும்.

## நன்றியறிந்த தோத்திரங்கள்

திருக்குடும்பக் கன்னியர்மட ஸ்தாபகரான நல்லபிதாவின் மன்ருட்டு உதவியால் அநேககாலம் என்னை வாதித்துப் பலமருந்துகளுக்கும் குணப்படாத கையிலிருந்த வாதம் குணப்பட்டது. நல்லபிதாவின்மூலம் இம்மன்ருட்டை எனக்களித்த தேவன் ஸ்துதிக்கப்படக்கடவாராக.

ம. மா. த.

யேசுவின் திருஇருதய இரக்கத்தினுலும், பரிசுத்த சதாசகாயமாதா, சந்தந்தோனியார், அதிதூதரான சம்மிக்கேல், சங். அல்போன்சா சகோதரி இவர்களது வேண்டுதலினுலும் எனக்குவந்த கடுமையான வியாதியில் நின்று குணமடையப் பெற்றேன். இவர்களது நாமம் என்றும் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

A. M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்



## என்ன சொல்லுது ?

"ஜெயம்"

'கா' 'கா' என்று கரையும்காகம் என்னசொல்லுது ?
காலைநேரம் எழும்பவேண்டும் என்றுசொல்லுது.
ஆகாயத்தில் பருந்துநின்று என்னசொல்லுது ?
அறிவில்வளர்ந்து உயரவேண்டும் என்றுசொல்லுது.

* * *

'கூ' 'கூ' என்று குயிலும்தொனியில் என்னசொல்லுது ?
கொஞ்சுந்தமிழிற் பாட்டுப்பாடு என்றுசொல்லுது.
'கீ' 'கீ' என்று பச்சைக்கிளியும் என்னசொல்லுது ?
கேள்விஞானம் பெற்றுவாழு என்றுசொல்லுது.

* * *

'ஊ' 'ஊ' என்று ஊதும்வண்டு என்னசொல்லுது ?
உலகிற்கல்விச் செல்வந்தேடு என்றுசொல்லுது.
'சோ' 'சோ' என்று அருவிபாடி என்னசொல்லுது ?
சுதந்திரத்தைப் போற்றவேண்டும் என்றுசொல்லுது.

## அண்ணா சொல்வது :

அருமைச் சகோதரங்களே !

சிறுவர் நிறைந்த குடும்பம் குதூகலம் நிறைந்த வீடு. அந்தக் குதூகலத்தை உண்டாக்க என்ன செய்கிறீர்கள் ? என்று சென்ற வாரங் கேட்டிருந்தேன். அதற்கு ஒருதம்பி மறுமொழி அனுப்பியிருக்கிறார். அதை இங்கு தருகிறேன்.

பட்சமுள்ள அண்ணா ! பாடசாலை காலத்திலும் பார்க்க விடுதலை காலத்தில் நாங்கள் அதிகமாய் வீட்டில் இருக்கிறோம் என்பது மெய். ஆனால், எமது சீவியம் எப்போதுமே குதூகலம் நிறைந்தது. காலையில் பூசையும், மாலையில் செபமாலையும் ஒருபோதும் தவறவிட மாட்டோம்.

விளையாடுவதற்காக எமது மைத்துனர் நம்வீட்டிற்கு வருவார். கிறிக்கெற் அல்லது உதைபந்து அடிப்போம். பத்திரிகை வந்ததும் பரபரப்பாய் அதைப் படிப்போம்.

மதியவேளைப் போசனத்தை ஆயத்தப்படுத்த அம்மை சமயற்கட்டுக்குப் போனால் அக்காவுங் கூடப்போய் உதவி செய்வா. நான் அக்காவுக்கும், அம்மாவுககும் ரசமான கதைகளையும், சம்பவங்களையும் பத்திரிகையிலிருந்து வாசிப்பேன்.

சாப்பிட்டபின் மாமியுடன் ஒருஆட்டம் "கறம்" போடுவோம். பின்னேரம் நற்கருணை சந்திககச் செல்வோம். அப்பா வீட்டிலிருக்கும் நாட்களில் படிக்கச் சொல்வார். மூலையிலிருந்து சற்றுநேரம் படிப்போம். நானும், அக்காவும் நேசிப்பதும், கோவிப்பதும், பிறகு சமரசப்படுவதும், ஒன்றாய் விளையாடுவதும் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் எப்போதும புதிராயிருக்கும்.

இதைவிடக் குதூகலமும் வேண்டுமோ ?

உங்கள் தம்பி, மோகன்.

நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ?

**உங்கள் அன்புள்ள**
**அண்ணா.**

## திருப்பலி

குருவானவர் பூசைப்புத்தகத்தை மூடிவிட்டுப் பீடத்தின் நடுவில்வருவார். அங்கு கடைசி ஆசீர்வாதங் கொடுப்பார். கொடுக்கும்பொழுது "பிதா, சுதன், பரிசுத்தஆவியாகிய சர்வவல்லப சர்வேசுரன் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஆமென்" என்பார்.

இந்த ஆசீர்வாதம் எங்களுக்கு வேறோர் ஆசீர்வாதத்தை நினைவூட்டுகிறது. இது திவ்வியயேசு மோட்சத்துக்குப் போகுமுன் கொடுத்த ஆசீர்வாதம். அவர் தமதுசிநேகிதரை ஒலிவேத்மலைக்குக் கூட்டிக்கொண்டு போனார். அவர்கள் அவரைச் சூழ்ந்துநிற்கும் பொழுது அவர் அவர்களை ஆசீர்வதித்தார். ஆசீர்கொடுத்ததும், அவர்கள் கண்களுக்குமுன் அவர்உயரஎழுந்தார். அப்பொழுது ஒருமுகில் அவரை மறைத்தது.

பூசையில் கடைசி ஆசீர்வாதத்தின் பின் குருவானவர் கடைசிச் சுவிசேஷம் வாசிப்பார். அதன் தொடக்கத்தில் மூன்றுமுறை சிலுவையடையாளம் வரைவார். அது எப்படி வரைவதென்று உங்களுக்குத் தெரியுமா ? (பெருவிரலால் நெற்றியிலும், உதடுகளிலும், இருதயத்திலும்)

சாதாரணமாக வாசிக்கும் கடைசிச் சுவிசேஷம் அர்ச். அருளப்பரின் சுவிசேஷத் தொடக்கத்தி லுள்ளது. அது திரித்துவத்தின் இரண்டாம் ஆளைப்பற்றிக் கூறும். இரண்டாம்ஆள் மெய்யான தேவன், நித்தியமானவர். அதாவது, ஆதியந்தம் இல்லாதவர். சர்வ வல்லபர். எல்லாவற்றையும் உண்டாக்கியவர் அவரே.

உலகத்தின் வெளிச்சமாகும் பொருட்டுத் திரித்துவத்தின் இரண்டாம்ஆள் உலகத்துக்கு எழுந்தருளினார். அவர் தம்சனத்தைத் தேடிவந்தார். அநேகர் அவரைவிசுவசிக்கவில்லை. அவரை ஏற்றுக்கொண்டவர்கள் சர்வேசுரனுடைய சுவிகாரப் புத்திரரானார்கள்.

மனித சரீரமெடுத்து அவர் உலகத்துக்கு வந்தார். தேவசுதன் மனிதனானார். "வார்த்தையானவர் மாமிசமானார்" என்று இதை அருளப்பர் குறிக்கிறார் தமது சுவிசேஷத்திலே.

இந்த வார்த்தைகளை வாசிக்கும் பொழுது குருவானவரும், சனங்களும் முழந்தாள் மடிப்பார்கள். யேசு தேவசுதன் என்பதை விசுவாசித்து ஆராதிக்கிறோமென்ற அடையாளம்.

இந்தச் சுவிசேஷமுடிவில் பரிசாரகர் "சர்வேசுரனுக்குத் தோத்திர"மென்பார்கள். [illegible] சர்வேசுரனுக்குத்தோத்திரஞ் செலுத்த எத்தனையோ காரணங்களுண்டு.

பூசைவேளையில் திவ்வியயேசு எங்களூடனிருந்தார். எமக்காகத் தம்மை ஒப்புக்கொடுத்தார். எமக்காக மண்டிருனார். சற்பிரசாதம் உட்கொண்ட எங்களுடன் விசேஷவிதமாய் ஐக்கியப்பட்டிருக்கிறார். இந்த நன்மைகளுக்காகச் சர்வேசுரனுக்குத் தோத்திரம்.

ஆண்டவர்எங்களிடம்வரும்பொழுது தம்முடன் வேறுகொடைகளையும் கொண்டுவருவார். பிணியாளருக்கும், பசித்தவர்களுக்கும், பாவிகளுக்கும் என்னசெய்தாரென்று அறிவீர்களே. அவர்களுடைய அவசரங்களில் உதவி புரிந்தார். எங்களுக்கும் அவ்வளவு செய்வார். ஆனால், நாம் அவரில் விசுவாசங் கொள்ளவேண்டும். அவரில் பூரண நம்பிக்கை உள்ளவர்களாயிருக்கவேண்டும்.

## நிலவே வாழ்க!

பால்வண்ண நிலவே ! பரமனின் பெரும்படைப்பே ! பூவனியோரை மகிழ்விக்கும் புத்தொளியே ! புதுமைக் கருத்துகள் பொங்கிடச்செய்யும் பூரணப்பொலிவே நீவாழ்க !

குளிர்தரும்ஒளியே ! சற்றுநில். ஏன் சிரிக்கிறாய் ? செப்பமாட்டாயா ? என்ன, சீவியத்தின்எல்லை இவ்வுலகில் இல்லை என்கிறாயா ? நன்குசொன்னாய் நல்நிலவே. "இறைஉலகம இல்லை ; இவ்வுலகே சொர்க்கம்" என ஏமாறுகின்றனரேஎன்று ஏளனச்சிரிப்புச் சிந்துகின்றனையா ? உண்மைதான். உணரவில்லையே உலகமாந்தர். உணரும்நாள் எதோ !

பால்வண்ண நிலவே ! வஞ்சகர்களும், பாவிகளும், கடவுள்இல்லையென்னும் நாஸ்திகர்களும் நடமாடும் இவ்வுலகின்கண ஒருவர்க்கும் ஒளித்திடாமல் அனைவருக்கும் அமுதொளி வீசுகிறாயே. உனதுஇச்செய்கை இறைவனை இல்லையெனபார்க்கும், இறைவழிபிசகி நடப்பார்க்கும் இறைவன் தமதுஇரக்கத்தைத் தடையின்றி அள்ளிவழங்குகிறார்என்பதை எடுத்துக் காட்டுவதாகவல்லவா அமைகிறது.

தேய்பிறைத் திங்களே ! முழுநிலவே ! ஏன் உன்பூரணப்பொலிவு காரிருள்படர்ந்து தேய்ந்துவருகிறது ? கடவுளுக்குவிரோதமாக — நீதிநெறி மார்க்கத்துக்குமாறாக நடப்போர்வாழ்விலும் காரிருள் சூழும் — அன்னவரின் வாழ்வு கெடும் என்று செப்புகிறாயா ? உன் கூற்று முற்றிலும்உண்மையே. எவ்வளவோ நீதிமுறைகள் இறைவன்கட்டளைகளை எடுத்தோதியும் அத்தனையும் அற்பமாகமதித்து எண்ணற்றவர்கள் கடவுள்தன்மையை மறந்து நாஸ்தீக [illegible] வாழ்வில் காரிருள் சூழ்ந்து மீளாநரகத்தில் வீழ்ந்துபடுகின்றனரே ! என்னே மாந்தர்மதியீனம் !

வளர்பிறை மதியே ! ஆ ! என்ன விநோதம் ! தேய்ந்து காணமல்போன நீ — இருதினம் உன்னைக்காணமல் தவித்தநான் — மீண்டும் அரைவட்ட வரம்பொத்தநிலையில் தெரிகின்றனையே. என்ன, காரிருளிலிருந்து விடுபட்டுவிட்டாயா ? மறைக்கப்பட்டநீ மீண்டும் தன்னொளிவீசத் தகைமைபெற்றுவிட்டேன் என்கிறாயா ? அத்தோடு நீ சொல்லாமல் விட்ட ஒருசெய்தியை நான்செப்பவா ? பாவக் காரிருள்பட்டு, வாழ்விற்கறைபட்டுவாழ்ந்தாலும் இறைவன் இரக்கத்தை வேண்டின் — வாழ்வைத்திருத்திப் புதுச்சீவியம்பெற அவரதுஇரக்கம் வேண்டின் நிச்சயம்பெறலாம் என்பதுதானே. ஏன்சிரிக்கிறாய் ? நினைத்ததைக் கூறிவிட்டேன்என்றா ? இரவின் இன்னொளியே ! வேகமாக ஓடிக்கொண்டே இருக்கிறாயே ? அது உன்கடமை என்கிறாயா ? வாழ்வில் கடமைபெரிதென மதிப்போனே மனிதன்என்கிறாயா ? சரிதான் அவனைப் பற்றி யார்நினைக்கிறார்கள் ? நீ தான் சொல்லவேண்டும், அந்த நினைவிழந்தோரிடம்.

ஏ, நிலவே, நில்அங்கே ! எதிரேபார் ! காரிருள்மேகம் உன்னைக் கவ்விக் கொள்ள வருகிறது. போகாதே, நில் ! அதோ, நீ மறைக்கப்பட்டு விட்டாய். சொல்வதைக் கேட்டால்தானே. என்ன ! மீண்டும் மோகனஒளியுடன் வெளிவந்துவிட்டாயா ? காரிருளை வென்றுவிட்டேன்என்று பீடுநடை போட்டா போகிறாய் ஓய்யாரநிலவே. பரலோகபாதை நோக்கிச்செல்லுகிற நாம் எதிரில் எத்துணை இடர்வரினும் வழிபிசகாமல் நேர்வழியில் இன்னல்களை இன்பமாக ஏற்றுச்செல்லின் நிச்சயம் அத்துணை இடையூறும் தீங்கிழைக்காது போய்விடும் என்பதைக் காட்டத்தானே இக்காட்சியை எனக்களித்தாய்.

பூரணத்திங்களே ! புத்தொளிவீசிப் புத்திபலகற்பித்த உனக்கு என் உள்ளம்கனிந்தவணக்கம் பலகால்வருகிறது. உன்கடமை முடிகிறது, போய்வா ! நீதிபலகற்றேன். நினைவிழந்தோரிடம் கூறிட நானும்செல்கிறேன். நிலவே, நீவாழ்க !

— வே. குரலோஷி

---

❋ ஆபிரிக்காவிலே கறுப்புமம்பா என அறியப்படும் ஓர்பாம்பு இருக்கின்றது. இது மணித்தியாலம் 20 மைல் வேகத்திலே நகர்ந்துசெல்லக்கூடியது.

* * *

❋ ஓர்கடிகாரம் மணி அடிக்கும் போது அதன்முதல்அடி தான் சரியான நேரத்தைத் தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெந்தெக்கோஸ்துவின் பின் 13-ம் ஞாயிறு

நிருபம் : கலாத். 3 : 16-22

தேவமீட்பரும், மத்தியஸ்தருமான திவ்வியயேசு யூதகுலத்தவரை மாத்திரமல்ல, எல்லாச சாதியாரையும், மனிதகுலப் முழுவதையுமே இரட்சிக்கவந்தவரென்று பிரசங்கிப்பதில சின்னப்பர் தனிப்பெருமை கொள்வர். அவர் தம்மைப் பிறசாதிகளின் போதகர் என்றே சொல்லுவார்.

செகமீட்பர் முதல் வாக்குப்பண்ணப்பட்டது ஆபிரகாமுக்கு. இரட்சணியம் ஆபிரகாமின்வழியாய் வந்ததேயல்லாமல் மோசேஸ் யூதருக்குத் தந்த சட்டங்களின் காரணமாயல்ல. வாக்குத்தத்தம முன்னும், பிரமாணம் பின்னும் வந்தபடியால், முன்னிருந்தவாக்கைப் பின்வந்த பிரமாணம் அழித்துவிட்டதென்னலாமோ? அப்படிச் சொல்லமுடியாது. மீட்பரும், இரட்சணியமும், சம்பாவனையும் வாக்குத்தத்தத்தினலேதான்.

அப்படியாயின் பிரமாணங்கள் என்னத்துக்காக? தேவவாக்கை மறந்துவிட்டவர்களுக்குக் கடமையை நினைவூட்ட.

சட்டங்களினல் ஒருவன் நீதிமானுக முடியுமா? முடிவதில்லை. ஏனெனில், வேதாகமமே சகலரும் பாவத்துக்கு அடிமைகளாயிருக்கிருர்களென்று கூறுகிறது. சட்டங்கள் அக்கூற்றை உறுதிப் படுத்துகின்றன.

ஆகையால், வாக்கும், இரட்சணியமும், சம்பாவனையும் யேசுவில் விசுவாசங் கொள்ளுகிறவர்களுக்கே கிடைக்கும். ஆகையால், யூதரென்று பெருமை பாராட்ட வேண்டாம். பிறசாதியாரென்று இகழவேண்டாம். கிறீஸ்துவில் விசுவாசமுள்ள எவருக்கும் அவருடையஇரட்சணியபலன் கிடைக்கும்.

— சர்வேசுரனுக்குத் தோத்திரம்

## பாடசாலைக்கோணம்

மாம்புரி, 8-2-55.

அதிவண. பிதாவே,

அர்ச். லூக்காஸ் 17-ம் அதிகாரத்தில் சொல்லப்படும் எமதுஆண்டவரின் வாக்கியமானது எப்பேர்ப்பட்டது? "இதோ சர்வேசுரனுடைய இராச்சியமானது உங்கள் மத்தியிலேயே இருக்கின்றது." மோட்சம் இங்கேயே தொடங்கிவிட்டதா?

W. E. D.

விடை : ஆம், தொடங்கிவிட்டது. உமது வீட்டின்முன்நிற்கும் மாமானது ஓர்விதையிலிருந்து உண்டானது. அவ்விதையினுள்ளே இப்பெரியவிருட்சத்தின் சுபாவமெல்லாம் அடங்கியிருந்து, வளர்ச்சிபெற்று இப்போது தனது பூரணரூபத்தை அடைந்துவிட்டது. ஒருதாயின் வயிற்றினுள்ளிருக்கும சிசுவானது ஓர்நாள் பெரியமனுஷனுய் வருவதற்குரிய குணங்களைக்கொண்டுள்ளது. அதேபோல ஓர்நாள் மோட்ச சீவியத்தை அனுபவிக்கவேண்டிய ஆத்துமமொன்று இவ்வுலகத்தில் இருக்கும்போதே மோட்சவாசிக்குரியதாகிய சீவியத்தின்வித்தைக் கொண்டிருக்கவேண்டும். இதைத்தான் இஷ்டப்பிரசாதம்என்று சொல்லுகிறோம். நம்மைப் பரிசுத்தப்படுத்திச் சர்வேசுரனுக்கும், திருச்சபைக்கும் ஏற்றபிள்ளைகளாகவும், மோட்சபாக்கியத்திற்குச் சுதந்தரர்களாகவும் ஆக்குகிற பரமகொடையே இஷ்டப்பிரசாதமாம். இது ஞானஸ்நானம் பெறும்வேளையில் முதன்முதலாக எமக்குக் கொடுக்கப்படுகின்றது. மோட்சசீவியத்தின் வித்தாகிய இக்கொடையைச் சாவான பாவத்தினுல் இழந்துபோகாவண்ணம் காப்பாற்றுவது மாத்திரமல்ல, அதை நற்கிருத்தியங்களினுலும், தேவதிரவியஅனுமானங்களை அடிக்கடிபெறு

## புத்தக மதிப்புரைகள்

### அர்ச். பத்தாம் பத்திநாதர் வாழ்க்கை வரலாறு

ஆசிரியர் : பிலோமன் அம்புரோஸ் [வில்
பிரசுரம் : அஸிஸி அச்சகம், நாகர்கோ
விலை : ரூ. 0-8-0

கத்தோலிக்கதிருச்சபையின் இருபதாம்நூற்றுண்டுச் சரித்திரத்திலே முக்கியபுருஷராய் விளங்குபவர் அர்ச். பத்தாம் பத்திநாதர். இவர் ஏழைக்குடும்பத்தில் பிறந்தும் ஏற்றம்உடையராய் வாழ்ந்து, பாப்பரசர் என்றபட்டத்தையும் தாங்கினுர். சீர்குலைந்த சமுதாயத்தைச் சீர்மைப்படுத்த அரும்பாடுபட்டு, ஈற்றில் வெற்றிமாலை சூடினுர். கத்தோலிக்க மறையை வளம்படுத்தி அதுவிமரிசையாகவிளங்க வழிகோலினுர். இவரது அரும் பெரும் வாழ்க்கை வரலாற்றைச் செவ்வனே விளக்குவது இந்நூல். கற்குந்தொறும் களிப்பூட்டும் வகையில் எழுதப்பட்ட இந்நூல கத்தோலிக்க தமிழ்உலகால் பெருமகிழ்வுடன் வரவேற்கப்படுமென்பதற்கையமில்லை. தேவநற்கருணைப் பக்தியைப்பரப்பி மக்களின்மனதிலே தேவநேசத்தைப்பரப்பிய அர்ச்சியசிஷ்டரின் வாழ்க்கை வரலாற்றை வாசிக்கும்போது பேருவகை ஊற்றெடுத்துப்பாய்கிறது. மக்களை நல்வழியில் நடமாடச்செய்த நற்பாப்புவின் நயமானசரிதையை நமக்கு அழகாக இனிய தமிழ்நடையில் எழுதித்தந்த ஆசிரியருக்குக் கத்தோலிக்க உலகம என்றும்கடமைப்பட்டதாகும். நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்ருேம்.

### யேசுக்கிறீஸ்துநாதர் யார்?

ஆசிரியர் : சுவாமி ஜே. ம. ஞானதிக்கம், சே. ச.
பிரசுரம் : ஜெயராக்கினி பிரசுரம்.
விலை : ரூ. 0—6—0

யேசுக்கிறீஸ்துநாதர் யார்? என்ற வினுவுக்கு விடைகாணுமுகமாகச் செகமீட்பரின் திவ்விய சரிதையைக் கவர்ச்சிகரமானமுறையில் விளக்குவது இச்சிறுநூல். சமயநுண்கருத்துக்களைத் தனகத்துள் அடக்கியதாய்த் தெள்ளத்தெளிய நடையில் வெளிவந்துள்ள இந்நூல் பள்ளிச்சிறுவருக்கு மாத்திரமன்றி, பராயப்பட்டவர்களுக்கும் யேசுநாதரின்சரிதையை இரத்தினச்சுருக்கமாக விளக்கிநிற்பதாகும். யேசுக்கிறீஸ்துநாதர் யார்? என்பது குறித்துப் பதினுன்குமுகமாக ஆசிரியர் விடைகாணகிருர். இவ்விடைகள் ஒவ்வொன்றும் கட்டுரைரூபமாக அமைந்திருக்கின்றன. அவை வேதாகமத்தின் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டனவாய் அமைந்திருப்பதோடு வேதாகமத்தைப் படிக்கச் செய்யும் தூண்டுகோலாகவும் விளங்குகின்றன.

சிறுவர்கள் வேதாகமத்தைப் படித்துவிளங்குதல் நிரம்பவும் கஷ்டமானதாகும். இந்நூல் மத்தியதர மாணுக்கர்கள் எவ்விதகஷ்டமுமின்றிப் படித்தறியக் கூடியதாகும். பாடபுத்தகமாக இருப்பதால் மீட்டற்பயிற்சிக்குதவியாகச் சிலபயிற்சிவினுக்கள் அமைந்திருந்தால் மிகவும் பொருத்தமாயிருக்கும். எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்ருேம்.

---

வதினுலும் வளர்க்கவேண்டியகடமை நமக்குஉண்டு. இப்பூவுலகில் தொடக்கப்பட்டதாகிய இம்மோட்ச சீவியத்தை மோட்சத்தில் பூரணமாய் அனுபவிப்போம்.

Sacred Heart College, Karaveddy
23-8-55

## பெற்ருர் தினவிழா

மன்னுரைச்சேர்ந்த சிறுக்கண்டல் எனும் கிராமத்திலே அமைக்கப்பட்டு விளங்குகின்றது அதன் நவமான கத்தோலிக்க பாடசாலை. சென்ற 5-8-55 பிற்பகல் வண. எச். மொருே சுவாமியவர்கள் தலைமையிலே அப்பாடசாலை முன்றிலில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப்பந்தரில் பெற்ருேர்தினவிழா பரிமளிப்பாக நடைபெறலாயிற்று. ஆரம்பத்திலே மாணவர்கள், வளர்ந்தவர்களின் விளையாட்டுப்போட்டிகளும், பின்னர் மாணவர்களின் ஆடல்பாடல்கள், நடித்தல்களும் சிறப்பாக நடந்தேறின. தலைவர்சுவாமிகளாலும், தலைமைஆசிரியர் எல். செபமாலைஅவர்களாலும், உடையார் எஸ். எம். சுவாந்துஅவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. விளையாட்டுப்போட்டிகளிலும், பேச்சுப்போட்டிகளிலும் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்கள்வழங்கப்பட்டன. இவ்விழாவிலே பெற்ருேரும், மற்ருேரும் பெருந்திரளாகச் சமுகமளித்திருந்தமை பாராட்டத்தக்கதாகும்.

— நிருபர்

---

## மட்டக்களப்பு
## தாண்டவன் வெளித்தபால்

**தாண்டவன்வெளி ஆண்பெண் பாடசாலைகளின் கல்விசம்பந்தமான சுற்றுப்பிரயாணம் :** சென்ற 13-ந் திகதி சனிக்கிழமை பாடசாலை முகாமைக்கார குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியவர்களுடனும், இருபாடசாலைகளினதும் ஆசிரிய ஆசிரியை, மாணவர் மாணவிகளுடனும் அதிகாலை 5-30 மணியளவில் புறப்பட்டுப் பொல்லனறுவைப் புராதன கட்டடங்களையும், அவற்றின் விசேடங்களையும் அறியச்சென்ருேம். முந்தியநாள் புகைப்படங்கள்மூலம் அவற்றின் விசேடங்கள் சகலருக்கும் அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டன. 8 மணியளவில் காலைப்போசனம்அருந்திப் 10 மணியளவில்பொல்லனறுவையை அடைந்தோம். மாணவர்க்கு முன்னறிவு இருந்தமையால் மிகவும் இலகுவாக எதையும் அறியவும், அதனுல் ஓர்உற்சாகங் கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. மதியத்தின் முன்னரே ஒழுங்குபண்ணப்பட்ட போசனசாலையில் உணவருந்திப் பிற்பகல் திரு. அன்ரனி மாட்டீன் அவர்களால் அளிக்கப்பட்ட தேநீர்உபசாரத்தில் கலந்துகொண்டபின் கிருஷிகத் தோட்டத்தின் பாற்பண்ணையைப் பார்வையிட்டு 8-30மணியளவில் வீடுதிரும்பினேம். வரும்வழியில் பெருமழை பெய்தபோதிலும் அதனுல் எவருமே பாதிக்கப்படவில்லை.

**குடும்பசெபமாலைப் படையணி:** தாண்டவன்வெளிப் பரிசுத்த வியாகுலமாதாகோயிற் பங்கைச்சேர்ந்த கிறீஸ்துவ குடும்பங்களில் 366 குடும்பங்கள் செபமாலைப் படையணியில் சேர்க்கப்பட்டுள்ளன. இக்குடும்பங்களை மாதாவுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கும்திருச்சடங்கு வண. கட்டளைக்குரவர் ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமியவர்களால் இம்மாதம் 15-ந் திகதி பிற்பகல் 5மணியளவில் திவ்வியநற்கருணை ஆசீர்வாதநேரத்தில் நடாத்தப்பட்டது.

— நிருபர்

---

● ஜப்பானிலே வேதகலாபனைநடந்தேறிய காலத்திலே—அதாவது இற்றைக்கு 341 வருடங்களின் முன்னே அங்கு சென்டாய்நகருக்குச் சமீபமான ஓர் கிராமமுழுவதும் கத்தோலிக்க திருச்சபையை விட்டுநீங்கியது. சமீபத்திலே அக்கிராமவாசிகள் முழுப்பேரும் ஒருங்கே மனந்திரும்பிக் கத்தோலிக்கராகவிருக்கின்ருர்கள்.

## வாழ்விலும் ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, வலேரியான்முன்பு விற்றஸ் நிறுத்தப்பட்டான்.

தேசாதிபதியாகிய வலேரியான் விற்றஸை அன்புடன் அணைத்தான். அவன் தன்விசுவாசத்தை மறுதலிக்கவேண்டுமென அநேகம்முறை வேண்டினுன். விற்றஸ் சிறிதேனும் இடங் கொடுக்கவில்லை. அதிபதியின் அன்பு அவனை மனந்திருப்பவில்லை. ஆகவே, அவனைத் தண்டனையால்வெல்ல விரும்பிய தேசாதிபதி விற்றஸைச் சிறையில்இடும்படி கட்டளையிட்டான்.

### சிறையிலிருந்து தப்புதல்

தான் அருமையாகப் பேணிவந்த விற்றஸ் வீட்டுக்குத்திரும்பிவாராததால் கிறெசென்சியா கலக்கமடைந்தாள். பிரபுவீட்டிற்கு ஓடிப்போய் விசாரித்தாள். "அந்தக் கத்தோலிக்க நாய் மறியலில் இருக்கிருன்" என்று அவன் தந்தை சொன்னதைக் கேட்டாள். அடிமைஅல்லவா? ஒன்றும்பேசாது வீடுநோக்கினுள்.

கொஞ்சம் உணவும், உடையும்எடுத்துக்கொண்டு மொடெஸ்ருஸின் துணையோடு மறியல்வீட்டை அடைந்தாளே அன்றி மறியல்வீட்டில் தான் என்ன செய்வதுஎன்று அவள் ஆலோசிக்கவில்லை.

தேவசித்தம் அவளை வழிநடத்தியது. சிறைக்காவலர் அந்நேரம் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர். கிறெசென்சியாவும், மொடெஸ்ருஸும் பெருவிரலால் நடந்து மறியல்வீட்டினுள்ளே சென்றனர். அங்கே விற்றஸைக்கண்டனர். சப்தம் இன்றியே மூவரும் வெளியே வந்தனர். காவலர் இன்னுமே நித்திரைசெய்வதைக்கண்டு பாதுகாப்பான ஓரிடத்திற்குப்போய் அங்கே தேவனுக்குத் தோத்திரஞ் செய்தனர். பகல்நேரத்தில் மறைந்திருந்தும், இரவில் சஞ்சாரங் குறைந்த வழியால் பயணஞ்செய்தும் லுஸ்கானியா பட்டினத்தை அடைந்தனர்.

### வேதத்திற்குச் சாட்சிகள்ஆதல்

லுஸ்கானியாவில் ஒருசிறியவீடு அவளுக்குக் கிடைத்தது. எந்தவேலை கிடைத்தாலும் அந்தவேலையை நேர்மையுடன்செய்து சீவித்தனர். ஆயினும் அவர்களின் சீவியகாலம் நீடிக்கவில்லை. சிறைச்சாலையில் விற்றஸ்காணப்படவில்லை. கிலாஸ்பிரபுவின் வீட்டில் கிறெசென்சியாவும், மொடெஸ்ருஸும் சீவிக்கவில்லை. இவர்களுடைய இரகசியத்தைஅறியும்படி வேவுகாரர் நான்கு பக்கமும் அனுப்பப்பட்டனர். அச்சிறிய பாக்கியமானகுடும்பம் வாழ்ந்த வீட்டைச் சிலவேவுகாரர் வளைந்துவந்தனர். ஒருநாள் உணவுநேரம் அவர்கள் தேவனுக்குத் தோத்திரஞ் சொன்னதைக் கேட்டதே அவர்களைக் கைது செய்தனர். கைதுசெய்யப்பட்ட இந்த மூன்றுநண்பர்களும் கிறீஸ்துவுக்குச் சாட்சிபகர்ந்தனர். கி. பி. 302-ம் ஆண்டளவில் தியோக்கிளேசியன் சக்கரவர்த்தியின் ஆட்சிக்காலத்திலே கிறீஸ்துவின் மகிமைக்காக அவர்கள் தங்கள் தலைகளை அர்ப்பணஞ் செய்தனர்.

---

● பரிசுத்தபாப்பரசர் சென்றஆடி மாதம் 30-ந் திகதியன்று காஸ்தெல் காண்டல்போவிலுள்ள தமது வேனிற்கால மாளிகை சென்றிருக்கின்ருர். அங்கேஅவர் மூன்றுமாதம்வரை தங்கியிருப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. அங்கேயேஅவர் தமதுவழமையான பேட்டிகளையும்அருளுவார்.

● பல்வேறு நாடுகளிலுமிருந்து லூர்துதிருப்பதிக்குச் செல்லும் அதிகமான வறியயாத்திரிகர்கள் அடுத்தவருடம் அப்பதியிலே இலவசமான தங்குவசதி அளிக்கப்படவிருக்கின்ருர்கள். இதற்கென அங்கே கல்வாரிக்குன்றின் சமீபமாகப் புதிய விடுதிஒன்று பிரான்சியகத்தோலிக்க சகாயஉதவி ஸ்தாபனத்தால் அமைக்கப்பட்டுவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகும் ஆபரணமும்

பொதுவாகப்பெண்கள் தங்கள் இயற்கையழகைப் பெருக்கிக்கொள்வதற்காகவே ஆபரணங்களை அணிகின்றார்கள். இன்றுநேற்று ஏற்பட்ட ஒருவழக்கமல்ல இது. பண்டுதொட்டு இருந்துவரும் ஒருவழக்கமாகும். ஆபரணங்களை அணிந்து அழகுபார்க்கும்ஆசை பெண்களிடம் இயற்கையாகவே அமைந்துள்ளது. ஆனால், இந்தஆசையை நிறைவேற்றுவதிற்றான் நாம்நிதான புத்தியோடும், விவேகத்தோடும் நடந்துகொள்ளவேண்டும்.

தங்க, வெள்ளிநகைகளை அணிந்து அழகுபார்க்க வேண்டுமென்ற ஆசைக்காக எல்லோராலும் பணத்தை வாரியிறைக்க முடியுமா? பணம்படைத்தவர்களால் மட்டுமே அப்படிச்செய்ய முடியும். அதற்காக மற்றவர்களெல்லோரும் ஆபரணங்களை அணியாமல் இருக்க முடியுமா? ஆபரணங்களை அணியத்தான்வேண்டும். ஆனால், அதற்கு ஒருஅளவு, ஒருவரையறை வைத்துக்கொள்வது விரும்பத்தக்கதாகும். போதிய பணவசதியில்லாத குடும்பங்களிலுள்ள பெண்கள் பணக்காரப் பெண்களைப்போலவே நகைகளை அணியவிரும்பினால் அதற்காக வீணுக்கடன்பட்டுப் பலதொல்லைகளை அனுபவிக்கநேரிடும். குடும்பத்திலநிலவும் அமைதியும, சமாதானமும், சந்தோஷமும்பொருந்திய சூழ்நிலை பாதிக்கப்படும். குடும்பதலைவருக்கு அநாவசிய மானகஷ்டங்கள் ஏற்படும். ஆதலால், பெண்கள் தங்கள் பொருளாதாரநிலையைக் கருத்திற்கொண்டே தங்களுக்கு வேண்டிய ஆபரணங்களைத் தெரிவு செய்யவேண்டும். இதுவிஷயமாய் வீட்டிலுள்ள பெரியவர்களின் புத்திமதியை அல்லதுஆலோசனையை அனுசரித்து நடப்பதே உத்தமம்.

சிலபெண்கள் திருமணநிகழ்ச்சி, விருந்துபசாரம்போன்ற வைபவங்களில கலந்துகொள்ள வேண்டியிருந்தால், தங்களிடமில்லாத நகைகளை அண்டைவீட்டாரிடமிருந்து இரவலாகப் பெற்று அணிந்துகொள்வதை நாம் சர்வசாதாரணமாகக் காணகிறோம். இப்படிச்செய்வது தவறாகும். ஏனெனில், இரவல்வாங்கப்பட்ட நகைகள் தவறிவிடுமாயின் அவற்றை ஈடுசெய்பக்கூடியசக்தி நமக்குஇருக்கவேண்டுமே. அப்படியில்லாதபோது நகைகளை இரவல்வாங்கித் தவறவிட்டுப் பின்கண்ணீர் சிந்துவது புத்திசாலித்தனமாகாது. இத்தகைய வைபவங்களுக்குப் போகவேண்டியிருக்கும்போது நம்மிடமுள்ள ஆபரணங்களைமட்டும் அணிந்து செல்வதால் நமது அந்தஸ்தும், கௌரவமும் குறைந்துவிடா. இரவல்வாங்கி ஏராளமான நகைகளைப் போட்டுக்கொண்டு சென்றால், நமதுஅந்தஸ்து உயருகிறதென்று நாம் நினைத்தபோதிலும் எங்கள் பொருளாதாரநிலையை அறிந்துள்ளவர்கள் நமமெதிரில் ஏதும் பேசாவிட்டாலும் மறைவிலஎங்களைப் பற்றி ஏளனமாகப் பேசிக்கொள்வார்கள். இதற்கு இடமளியாதிருப்பதே விவேகமாகும.

ஆபரணங்களை அளவோடு அணிந்தாற்றான் அழகு அதிகரிக்குமென்பதையும் நாம்கவனத்திற் கொள்ளவேண்டும். அளவற்றஆபரணங்கள் அழகைக் கெடுக்குமேயன்றி அழகைக்கொடுக்கா. மேலும் அநேகஆபரணங்களை அணிவதில் மற்றொருஆபத்துமுண்டு. நாம் ஒருகருமத்தில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கும்போது ஏதாவதொரு ஆபரணம் கழன்றுவிழுந்தால், அதைக் கவனியாம விருந்துவிடவும் நேரும். தேவையான நகைகளை மட்டும் அணிவதன்மூலம் இந்த நஷ்டத்தை நாம் தவிர்க்கலாமல்லவா?

M. R.

> "உண்மையான மனிதன் எவரையுமே துவேஷிப்பதில்லை" —நெப்போலியன்



# பல தேசங்களில்

## றியோ டி ஜனேய்ரோநகர்

சமீபத்திலே சர்வதேச சற்பிரசாத மகாநாடு பிரஸ்தாபமாக நடந்தேறிய பிறேசிலநாடு இற்றைக்கு 455 வருடங்களின்முன்னர் பேதுரு அல்வாறெஸ் கபிறல்எனும் போர்த்துக்கேய சேனுபதியால் கண்டுபிடிக்கப் பட்டதாகும். அப்போதுஇவர் அதற்கு "உண்மையான திருச்சிலுவைநாடு" என்று பெயர்சூட்டினர். இவருடன்சென்ற ஓர்பிரான்சீஸ்கன் சபைக் குருவானவரால் அங்குமுதன்முதலாகத் திவ்விய பூசை நிறைவேறியது. அந்நாட்டின் தலைப்பட்டணமாகிய றியோ டி ஜனேய்ரோநகரின் பாதுகாவலர் அர்ச். செபஸ்தியாரே. அந்நகரின் முழுநாமம், "ஜனவரிஆற்றின் அர்ச். செபஸ்தியார்" என்பது.

இந்தநாமத்தின் ஓர் பகுதியான றியோ (ஆறு) என்பது, மிகப்பெரிய அக்குடாக்கடலைக் கண்டுபிடித்த போர்த்துக்கேயர் அஃது ஜனவரிஎன்ற போாற்றின் கழிமுகமென்று எண்ணியதிலிருந்தே வாலாயிற்று. 1502-ம் ஆண்டு ஜனவரி (தை) மாதம் 1-ந் திகதியன்று கண்டுபிடிக்கப் பட்டதிலிருந்து ஜனேய்ரோ (ஜனவரி) என்றபெயர் வாலாயிற்று. அர்ச். செபஸ்தியாரின் பெயர்வரக்காரணம், அங்குகுடியேறியிருந்த எதிரிகளான பிரான்சியர்களை 1567-ம் ஆண்டு ஜனவரிமாதம் 20-ந் திகதியாகிய அர்ச். செபஸ்தியாரின் திருநாளன்றே போர்த்துக்கேயர் வெற்றிகொணடார்கள்.

ஜனேய்ரோநகர் 20 லட்சம் மக்களைக்கொண்ட ஓர் பெரியபட்டணமாகும். பிரமிபபை உண்டுபண்ணும் தனது குடாக்கடல்நீளம் — அதாவது உலகிலுள்ள கடற்படைகள்முழுவதையுமே தன்னுள் அடக்கக்கூடிய குடாக்கடல்நீளம் மிகஅலங்காரமாக அது அமைந்திருக்கிறது. அதன் பின்புறமாக நூதனமாதிரிகளையும், நூதன நாமங்களையுங் கொண்ட மலைகள் அமைந்திருக்கின்றன.

## சிறைக்கைதியின் சங்கீதஞானம்

சமீபத்திலே ஐக்கியஅமெரிக்கதேச கலிபோணியாகா சிறைச்சாலையில் ஐந்துவருட கடுங்காவற்தண்டனை விதிக்கப்பட்ட ஓர்குற்றவாளி அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றுச் சிறைச்சாலையில் இருந்துகொணடே பியானோ வாசித்துவந்தான். வானொலியிலே அது ஒலிபரப்பப்பட்டதைத்தொடர்ந்து ரசிகர்களிடமிருந்து அவனுக்குப் பரிசில்கள்வந்து குவிந்துகொணடேயிருந்தன. அவற்றில் 400 பவுண் பெறுமதியுள்ள ஓர்மோட்டார்கார், 50 பட்டுச்சட்டைகள், 3 லட்சம் சிகறெற்றுகள், ஒரு டசின் கார்சட்டைகள் ஆகியனவும் அடங்கும். பொதுசனங்களின் கேள்விப்படியே அவன் சிறையினின்றும் விடுதலைசெய்யப்பெற்றுத் தனக்குப் பரிசிலாகக்கிடைத்த காரிலேயே வீட்டுக்குப் பறந்துசென்றான்.

## 1800 ஆண்டுகளுக்குமுன்

சந்திரனுக்குச்செய்யும் ஓர் பிரயாணத்தைப்பற்றிய அதிகம்முந்தியபுத்தகத்தை லூகியன்என்றகிரேக்கர் எழுதிவைத்துள்ளனர். இந்தப்புத்தகம் எழுதப்பட்டு 1800-ம்வருடம்1960-ம்ஆண்டிலே பூர்த்தியாகும. அப்புத்தகத்திலே அவரால்எழுதப்பட்டுள்ள சம்பவம் 1800வருடங்களைக் காணுமுன்னரே மனிதர் சந்திரனுக்குத் தங்கள் முதற்தரிசனையை அளித்திருப்பார்கள், அன்றேல் குறைந்தபட்சம் அதைச் சூழவர ஓர்சுற்றுப்பிரயாணம் நடத்தியிருப்பார்கள் என்பதைக்குறித்தோ சிறிதும்ஆட்சேபனையே கிடையாதாம். சந்திரனுக்குச்செய்யும் பிரயாணத்துக்குத் திட்டமிடும்விஷயமாய்த் தாங்கள் அறியவேண்டியவைகளை விஞ்ஞானிகள் இப்போதுநன்கறிவார்கள். இந்தப்பிரயாணத்தைச் செய்துமுடிக்கலாம்; ஆனால், அதற்குக் காலமெடுக்குமென்றும், ஆகாயவெளியில் பறந்துசெல்லும் கப்பலைக்கட்டிமுடிக்க மிகப் பெருந்தொகையான பணச்செலவு ஏற்படுமென்றும் நிபுணர்கள் கூறுகின்றார்கள். பிரயாணத்தின்போது மலைபோல எதிர்கொள்ளும் மாபெருங்கஷ்டங்களையெல்லாம் மேற்கொள்வதென்றால் இலகுவானகாரியமாகாது.

## மகாப்பெரிய கடிகாரம்

உலகின் மகாப்பெரிய கடிகாரம் எங்கே இருக்கின்றது? நியூயோர்க்நகரிலுள்ள கொல்கேற் கட்டடத்தின்மேல் இருக்கின்றது. இது லண்டன்நகரின் போான பிக்பென்கடிகாரத்தைப்போல இருமடங்கு பருமனுள்ளது. தற்போது இக்கடிகாரமும் பழுதுபார்க்கப்பட்டு வருகிறது. இது பலவருடகாலமாக லட்சக்கணக்கான நியூயோர்க்நகர்வாசிகளுக்குப் பிரமாணிக்கமாக நேரந்தெரிவித்து வந்திருக்கிறது. இந்தக்கடிகார முகத்தின் குறுக்களவு ஐம்பதுஅடியாகும. இதன் நிமிஷக்கம்பியின் நுணி மணித்தியாலம் 155 அடி — அதாவது நாளொன்றுக்கு ஏறக்குறைய முக்கால் மைல்தூரம் சுற்றிவருகின்றது. தற்சமையம் இதன் மணித்தியாலக்கம்பியும், நிமிஷக்கம்பியும் புதிதாக மாற்றியமைக்கப் படுகின்றன. உருக்கும், அலுமீனியமுங்கொண்டு செய்யப்பட்டஇவைகள் முறையே 19அடியும், 27அடியும் நீளமும், 2ருத்தல் நிறையுமுடையன. கடந்த 31வருடங்களாக முறையே மரத்தாலும், உருக்காலும் செய்யப்பட்ட மணித்தியாலக்கம்பியும், நிமிஷக்கம்பியுமே இருந்துவந்தன.

* * *

● சீனக்கம்யூனிஸ்தர்கள் 1950-ம் ஆண்டிலே கிராமவாசிகளுக்குக் கொடுத்திருந்த சிறுகாணித்துண்டுகளைத் திரும்பக்கைப்பற்றிச் சோவியற் கூட்டுக்கமத்திட்டத்தை அவர்களிடம் திணித்துவருகின்றார்கள். இத்திட்டப்படி, காணி அரசாங்கத்துக்குச் சொந்தமாகும். கிராமவாசிகள் சீவனத்துக்காக அதில் வேலைசெய்ய வேண்டியதுதான்.

● தற்போது 83வயதுடையவரான இத்தாலிய புளோறென்ஸ்நகர் அதிமேற்றிராணியாராகிய கருதினல் தல்லா கொஸ்டாஆண்டவர் சமீபத்திலே தமதுகுருத்துவ 60-ம் வருட வைரயூபிலியையும, தற்போது 73வயதுடையவரான கேப்பிள்ஸ்நகர் அதிமேற்றிராணியாராகிய கருதினல்மிம்மி ஆண்டவர் தமதுமேற்றிராணித்துவ 25-ம் வருட வெள்ளியூபிலியையும் கொண்டாடியிருக்கின்றார்கள்.

● ஐக்கிய அமெரிக்கதேச கொலராடோவிலே கிறண்ட்ஜங்ஷன் நகரில் தனதுஅத்திவாரத்துடன் நாலாபக்கமும் பதனமயாகத்திரும்பக்கூடிய ஆறுமாடிக்கட்டடம்ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது. இதனைக்கட்டிமுடிக்க ஏற்படும்செலவு 8 லட்சம்பவுண். மாரியிலேசூரியனைநோக்கவும், கோடையிலே அதிகபிரகாசத்தினல் ஏற்படும் கண்கூச்சத்தைக் குறைக்கும்படியாக எதிர்ப்பக்கத்தைநோக்கவும் தக்கதாய் இதனைத்திருப்பிவிடலாம்.

● காஸ்தெல் கான்டல்போவிலுள்ள பாப்பரசரின் கோடைகாக வாசஸ்தல முற்றத்திலே சமீபத்தில் ஓர்நாள் பெருந்திரளாகக் குழுமியிருந்த யாத்திரிகர்களுக்குப் பேட்டியளித்தபோது பரிசுத்தபிதா மேல்மாடியில் நின்றுகொண்டு ஆறுபாஷைகளில் — அதாவது ஆங்கில, பிரான்சிய, ஜேர்மனிய, உலாந்த, இத்தாலிய, போர்த்துக்கேய பாஷைகளில் பேசலாயினர்.

● லண்டன்நகரிலே சமீபத்தில் இறந்த ஓர்தொழிலாளியின் இருதயத்தை டக்றர்மார்எடுத்துப் பரிசோதித்தபோது அதுமுழுதும் கல்லாக மாறியிருக்கக் கண்டார்கள். மனிதனின் அங்கங்கள் இவ்விதம் கல்லாக மாறும்நோய்க்குக் "கல்சீர் ரேசிஸ்" என்று வைத்தியநிபுணர்கள் பெயரிட்டிருக்கின்றனர்.

● ஐக்கிய அமெரிக்கதேச ஸ்ரான்டேட்ஸ் கருமசாலையிலே அணுச்சக்திகொண்டு இயங்கும் கடிகாரம்ஒன்று கண்டுபிடித்துச் செய்யப்பட்டிருக்கிறது. உலகில் எக்காலத்திலாவது அதிகஞ்சரியானநேரம் காட்டக்கூடியதாய்ச் செய்யப்பட்டுள்ள கடிகாரம் இதுவேயென்றும், இது சரியான நேரத்திலும் ஒருசெக்கன்வித்தியாசங் காட்டுகிறதாயின் 30லட்சம்வருடங்கள் செல்லுமென்றும் சொலலப்படுகிறது.


## GOVT. NOTICE

### Forest Dept.

N2427—14 logs Palu, Milla & Manamal; 2 lots sawn timber; 2 lots planks; 5 lots Reepers & 70 Poles will be sold by Public Auction at the Murunkan Timber Depot by the D.F.O., N.D., Jaffna on 13-9-55 commencing at 10 a.m. Intending purchasers are requested to acquaint themselves with the special conditions governing the sale which are available with the Depot Keeper, Murunkan where the timber can be inspected earlier by arrangement.

## பள்ளிக்கூடப் புஸ்தகங்கள்

இலங்கைப் பாடசாலைகளின் உபயோகத்திற்காக விசேஷமுறையில் எழுதப்பட்டது.

### ஞானேபதேசம

| | ரூ. | சத. |
| --- | --- | --- |
| சின்னக் குறிப்பிடம் ... | | 30 |
| பெரிய குறிப்பிடம் ... | | 50 |

### கத்தோலிக்க வாசகம்

| | ரூ. | சத. |
| --- | --- | --- |
| கீழ்ப் பிரிவு ... | | 50 |
| மேற் பிரிவு ... | | 50 |
| இரண்டாம் புத்தகம் ... | | 60 |
| மூன்றும் புத்தகம் ... | | 70 |
| நாலாம் புத்தகம் ... | | 80 |
| ஐந்தாம் புத்தகம் ... | | 90 |

### நவமணி வாசகம்

| | ரூ. | சத. |
| --- | --- | --- |
| கீழ்ப் பிரிவு | அச்சில் | |
| மேற் பிரிவு ... | | 50 |
| இரண்டாம் வகுப்பு ... | | 60 |
| மூன்றும் வகுப்பு ... | | 70 |
| நாலாம் வகுப்பு ... | | 80 |
| ஐந்தாம் வகுப்பு ... | | 90 |
| ஆறும வகுப்பு | அச்சில் | |
| ஏழாம் வகுப்பு ... | 1 | 00 |

● தபாற்செலவு பிரத்தியேகம்.

● புஸ்தகப் பெறுமதியின் அரைவாசிப்பணம் அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

கிடைக்குமிடம்:—

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 25-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org